# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 2 3 4 1 1

வள்ளுவர் ஆண்டு 2003, மாசி 22உ (5-3-72) ஞாயிறு 1391 முஹறம் 18 புத்தகம் 25 இதழ் 15


### குமாரசூரிய மாத்தயா! உன் கூத்து என்ன கூத்தையா!

குமாரசூரியர் கருணாநிதியோடு தன்னை ஒப்பிட்டுப் பேசி இருக்கிறார்.

குமாரசூரியரே! நீரா கருணாநிதி?

கருணாநிதியின் 'முரசொலி' பத்திரிகை ஈழத்துக்கு வரக்கூடாது என்று தடைவிதித்த நீரா கருணாநிதி?

குமாரசூரிய மாத்தயா உன் கூத்து என்ன கூத்தையா?

# கிழக்கு மாகாண தமிழர் முழக்கம்!

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக தமிழர் ஒன்றுபட்டு எதிர்ப்புக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். திருக்கோணமலை நேமிநாதன் தொடக்கம் தெற்கே திருக்கோவில் அறப்போரணித் தலைவர் அரியநாயகம் வரை புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து ஆவேசமான குரல் எழுப்பியுள்ளார்கள்.





மட்டக்களப்பில் கடந்த வாரம் கட்சி சார்பற்ற முறையில் நடைபெற்ற ஓர் கருத்தரங்கில் கல்குடா நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் 'புதிய அரசியல் சட்டம் தமிழர்களுக்கு மிகப்பெரிய தீங்கினை இழைக்கிறது' என உணர்ச்சிவசப்பட்டு கூறினார். இக் கூட்டத்தில் மட்டக்களப்பின் பிரமுகர்களான வழக்கறிஞர் அ. தவராசா, வழக்கறிஞர் எஸ். எஸ். அரியரெத்தினம், எஸ். மயில்வாகனம், ஜே. எல். திசவீரசிங்கம், நோபின் அரசரெத்தினம் ஆகிய பல கட்சிக்காரர்களும் பங்கு கொண்டனர்.

'என்னுடைய கட்சி புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து ஏற்கெனவே நடவடிக்கைகளில் இறங்கிவிட்டது' என இக்கூட்டத்தில் மட்டக்களப்பு மூதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராசதுரை முழங்கினார்.

'புதிய அரசியல் சட்டம் தமிழனின் அடிமைச் சாசனம்' என்று தமிழரசுக்கட்சித் தலைவர் சி. மூ. இராசமாணிக்கம் அவர்களும் 'புதிய அரசியல் சட்டம் தமிழினத்தின் மானத்தை பறிக்கிறது' என்று திருமலை நாடாளுமன்ற உறுப்பினர் நேமிநாதன் அவர்களும் புதிய அரசியல் சட்டத்தை வருணித்தார்கள்.

'நான் முதன் முதலாக தடுப்புக்காவலையோ—சிறையையோ காண என்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறேன்' என்று மூதூர் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை மூதூர் தொகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்

( 4ம் பக்கம் பார்க்க )





அறப்போர் அணித் தலைவர் அரியநாயகம்

## கச்சதீவு தமிழனுக்கு சொந்தம்!

### தமிழ் நாடு அரசு சொல்கிறது!

இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையில் உள்ள கச்சதீவு தமிழ்நாட்டுக்கே சொந்தம் என்றும் —அது இலங்கைக்கு சொந்தமில்லை என்றும் தமிழ்நாட்டு அரசு தனது உத்தியோகபூர்வ ஏடான 'தமிழரசு' என்னும் ஏட்டில் கூறியிருக்கிறது.

ஆண்டுதோறும் கச்சதீவில் நிகழும் இருத்தவ தேவாலய விழாவுக்கு தமிழ்நாட்டில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்து கலந்துகொள்வது வழக்கமாகும். ஈழத்தில் இருந்தும் பக்தர்கள் போவதுண்டு.

இராமேஸ்வரத்துக்கு வடகிழக்கில் 10 மைல் தொலைவில் கடல் நடுவே கச்சதீவு இருக்கிறது. முன் காலத்தில் இது இராமேஸ்வர மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

கச்சதீவு தமிழ் நாட்டுக்கே சொந்தம் என்னும் ஒரு பெரிய பிரச்சாரத்தை தமிழகம் பூராவும் தமிழக அரசு செய்ய இருக்கிறது. தீவை தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக்கவேண்டும் என்று மத்திய அரசை தமிழ் நாட்டு அரசு வற்புறுத்துமாம்.

## முத்திரை வெளியிட்டவரின் முகத்திரை கிழிகிறது!

நல்லைநகர் ஆறுமுகநாவலருக்கும் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமிக்கும் முத்திரைகள் வெளியிட்டதன் மூலம் ஐக்கிய முன்னணி அரசு தமிழ் இலக்கிய உல

( 7ம் பக்கம் பார்க்க )

## முஜிபுர் ரகுமான் இலங்கையில் வாழ்கிறார்!

முஜிபுர் ரகுமான் இலங்கையில்தான் சீவிக்கிறார். ஆச்சரியப்படுகின்றீர்களா? தமிழினத்தை குழிதோண்டிப் புதைக்க நீண்ட காலமாக ஆயிரம் சதிகளைப் புரிந்து வரும் லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் போனவாரம் பண்ணிய ஒரு புரளிதான் இது:

இலங்கையில் அமரதாச பெர்னாண்டோ என்று ஓர் ஆள் இருக்கிறார். இவர் தப்பித்தவறி வங்காளதேசத்துக்குப்போய் முஜிபுர் ரகுமானோடு உட்கார்ந்து ஒரு புகைப்படம் பிடித்துக் கொண்டு இலங்கைக்கு வந்துவிட்டார். இங்கு வந்த அமரதாச, முஜிபுர் ரகுமான் சொன்னதாக தன் விருப்பத்துக்கு ஒரு பொய்யை அவிழ்த்துவிட்டிருக்கிறார்:

'வங்காள தேசத்தில் பிரிவினை கேட்கவேண்டிய அவசியம் இருந்தது. இலங்கையில் அப்படி ஒரு பிரிவினைக்கான சூழ்நிலை இல்லை' என்று முஜிபுர் ரகுமான் கூறியதாக முழுப்பொய் சொல்லி இருக்கிறார் அமரதாச என்ற ஆள்: இப் 'பச்சைப் பொய்' லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் வெளியாகி இருக்கிறது.

அமரதாச என்பவரின் சொந்தக் கருத்து முஜிபுர் ரகுமானின் கருத்தாக வெளியிடப்பட்டிருக்கிறது. அமரதாச என்ற இந்த 'முஜிபுர்' ரகுமான் இப்போது இலங்கையில் தான் வாழ்கிறார்.

எத்தனை பெரிய புரளியை லேக்ஹவுஸ் பத்திரிகை கும்பல் துணிந்து செய்துள்ளது என்று ஆச்சரியப்படுகிறீர்களா—இது என்ன ஆச்சரியம் — இப்படி எத்தனை

## சீனத் தோழர்களுக்கு ஞானம் பிறக்கிறது!

சமஷ்டி கேட்பது வகுப்புவாதம் என்று கடந்த பல ஆண்டுகளாக கூறிவந்த இலங்கைப் பீக்கிங் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கடந்தவாரம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது; தீர்மானம் இதுதான்:-

''பிரதேச சுயாட்சியுடன் கூடிய ஐக்கிய இலங்கைக் கொள்கைக்கு ஆதரவளிக்குமாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மக்களைக் கேட்டுக்கொள்கிறது!''

வேடிக்கை பார்த்தீர்களா? இப்போதுதான் சீனத் தோழர்களுக்கு ஞானம் பிறக்கிறது!

## கொல்வினை ஈழவேந்தன் குனிய வைத்தார்!

கொழும்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் 'புதிய அரசியல் சட்டம்' பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் கொல்வினைப் பேசவிடாமல் மக்கள் கூச்சல் போட்டனர்.

கருத்தரங்கில் திக்கித் திணறிப் பேசி—அரைகுறையில் பேச்சை முடித்துவிட்டு—மேடையை விட்டு இறங்கிய கொல்வினைப் பார்த்து 'இங்கிலிஷ் ஏகாதிபத்திய அரசமைப்பை நீங்கள் நிராகரித்துப் புதிய அரசமைப்பை ஏற்படுத்துவது எங்களுக்கும் மகிழ்ச்சி தான்—ஆனால் அப்படி நீங்கள் ஏற்படுத்தும் அரசமைப்புச் சிங்கள ஏகாதிபத்தியத்தின் அரசமைப்பாய் அல்லவா அமைகிறது. ஒரு ஏகாதிபத்தியத்தை ஒழித்து இன்னொரு ஏகாதிபத்திய அரசமைப்பை நிறுவுகிறீர்களே! இது என்ன கொடுமை!' என்று ஈழவேந்தன் கேட்டார். 'உமது கேள்விக்குப் பதில்தர முடியாது' என்று சொன்ன கொல்வின் குனிந்த தலை குனிந்தபடியே கூட்டத்தை விட்டு வெளியேறினார் — பக்கத்திலிருந்தவர்கள் 'பேசாமல் போகிறார்!' என்று கூச்சல்போட்டுச் சொல்லி வழியனுப்பி வைத்தார்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சலான துரோகியே!
## துள்ளிக்குதிக்கும் தியாகராசாவே!
## வாலைச் சுருட்டிக் கொண்டு சும்மா இரு!

காவடி தியாகராசாவுக்கு வரப்போகும் புதிய குடியரசில் ஒரு கண். அந்தக் குடியரசில் அமையப்போகும் புதிய மந்திரி சபையில் சிலவேளை இரண்டு தமிழ் மந்திரிகளுக்கு இடம் கிடைக்கலாம் என்று ஒரு கதை பரவலாக அடிபடுகிறதல்லவா? அந்த அடிமைத் தொழும்பு வேலையில் குமாரசூரியரோடு சேர்ந்து ஏன் தானும் ஈடு பட முடியாது என்பதே தியாகராசாவின் ஆசையாம்— ஆகவே வரப்போவதாகச் சொல்லப்படும் புதிய குடியரசில்— கிடைக்கப்போவதாகச் சொல்லப்படும் இரண்டாவது தமிழ் மந்திரி பதவிக்கு காவடி தியாகராசா இப்போதிருந்தே தன்னைத் தயார்படுத்தி வருவதாகத் தெரிய வருகிறது. இதன் விளைவே சமீபகாலத்தில் காவடி தியாகராசா பத்திரிகைகளில் பிதற்றித் தள்ளும் அறிக்கைகள் என்று நாம் நிச்சயம் நம்பலாம்.

தினகரன் (27-2-1972) வாரமஞ்சரியில் தியாகராசா முட்டாள் தனமாகப் பிதற்றித் தள்ளியிருக்கிறார். புதிய அரசியல் சட்டத்தை எதிர்ப்பவர்கள் 'சுயநலவாதிகள்' என்று கூறியிருக்கிறார் தியாகராசா.

துள்ளிக்குதிக்கும் தியாகராசாவே! துணிச்சலான துரோகியே! யாரையா சுயநல வாதிகள்? நீயும்—உனது சகாக்களுமா? நாங்களா? தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் வெற்றி பெற்ற நீங்கள்—அந்தத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியையே தாக்கி வீசி விட்டு—சுயநல வெறியோடு தனித்து நிற்கிறீர்கள் ஈழத்துத் தமிழ் இனம் முழுவதும் ஒன்று பட்டு 'புதிய அரசியல் சட்டத்தை' எதிர்க்கும் இவ்வேளையில் நீயும் உனது சகாக்களும் சுயநல ஆசையால் தனித்து நின்று துள்ளிக் குதிக்கிறீர்கள். தியாகராசாவே! தியாகராசாவே! யாரையா சுயநலவாதி?

"உடனடியாக புதிய அரசமைப்பு தமிழ் மக்களுக்கு எல்லா நன்மைகளையும் வழங்குமென்று எவரும் எதிர்பார்க்கக் கூடாது; காலக்கிரமத்தில் இந்நாட்டில் சிங்களமும் தமிழும் சம அந்தஸ்து பெற இந்த அரசியல் சட்டம் வழிவகுக்கும்" என்று தனது அறிக்கையில் கூறியிருக்கிறார் தியாகராசா! ஏனையா தியாகராசா நீ என்ன ஜோசியரா? பின்பு ஒரு காலத்தில் இந்த அரசியல் சட்டம் தமிழ் மக்களைக் கவனிக்கும்— தமிழருக்கு நல்ல வாழ்வை இது தரும் என்று சொல்ல நீ என்ன மைபோட்டுப் பார்க்கும் மாந்திரிக மேதையா? உனக்கு மந்திரி பதவி வேண்டும் என்றால் அதற்காக தமிழ் இனத்தை விற்பதா?

இப்போது அரசியல் சட்டத்தில் தமிழுக்கு சரியான உரிமை தேடித் தரமுடியாத நீ—அரசாங்கத்துக்கு உன்னையே காவடி தூங்கிக் கூத்தாடும் நீ— நாளைக்கு இந்த அரசியல் சட்டம் நன்மை தரும் என்று சொன்னால்— நாளைக்கு இந்த அரசியல் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்றால் இது என்ன கதை?

தினகரன் (27-2-1972) வாரமஞ்சரியில் தியாகராசாவே! உன் அறிக்கையில் என்ன கூறி இருக்கிறாய்; அறிக்கையின் தொடக்கத்தில் இப்படி எழுதுகிறாய்:—

"புதிய அரசியல் அமைப்பின் கீழ் தமிழர்களுக்கு ஏற்படவிருக்கும் நன்மைகளை விளக்கி தமிழ்த்தொகுதிகள் தோறும் கூட்டங்கள் நடத்த தமிழக் காங்கிரஸ் பாராளு மன்றக் குழு தீர்மானித்திருக்கிறது"

இப்படி உன் அறிக்கையின் தொடக்கத்தில் கூறி விட்டு கடைசியில், என்ன கூறுகிறாய்?

'இப்பொழுது அமைக்கப்படும் அரசியல் சட்டம் நிரந்தர மானதல்ல மாற்றத்துக்குரியது. இப்போது அமைக்கப்பட்ட அரசியலமைப்பில் பிற்காலத்தில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்"

என்று அல்லவா கூறுகிறாய். துவக்கத்தில் 'தமிழினத்துக்கு நன்மை பயக்கும் அரசியல் சட்டம் இது என்று கூறிவிட்டு பின்பு அதே அறிக்கையில் 'பிற்காலத்தில் இச்சட்டத்தை நாம் வேண்டுமானால் மாற்றலாம்' என்றும் கூறுகிறாயே—நன்மை பயக்கும் ஒரு சட்டத்தை ஏனையா நீ மாற்றவேண்டும்? யாரை ஏமாற்றுகிறீர்? உன்னுடைய பழையகால வாழ்வில்—நீ அதிபராக இருந்த போது இப்படித்தான் உன் பள்ளிக் கூட மாணவருக்கு பாடம் படிப்பித்துக்கொடுத்தாயா? நல்ல காலமையா நீ பள்ளியை விட்டது— இனிப் படிக்கும் மாணவர்களாவது தப்பினார்கள் — கடவுள் காவல்!

தியாகராசாவே! காவடியே! பனியே! மைபோட்டுப் பார்க்கும் மந்திர சிகாமணியே! அரசினர் வாலே! அடிவருடியே! அமைச்சர் பதவிக்குக்கொட்டாவி விடும் அற்பத் தனத்தின் மொத்த வடிவமே! உனக்கு நாங்கள் ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்கிறோம் — நீ என்ன தான் துள்ளிக் குதித்தாலும் தமிழினம் தயாராகி விட்டது! துரோகத் தனத்துக்கு சமாதிகள் தோன்றும் காலம் தொடங்கி விட்டது! வாயை அடக்கிக் கொண்டு இரு! வாலைச் சுருட்டிக்கொண்டு இரு! இல்லையேல் இந்த சமுதாயத்தின் சாபம் உன்னைச் சாம்பலாக்கும்! ஆம்!

---

# வடக்குக் கிழக்கு மக்களின் சிந்தனைக்கு

வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களே! ஈழம் வாழ் தமிழ் மக்களின் அரசியல் துறையிலே நல்ல கட்டம் ஒன்று ஏற்படப் போகின்றது;

இதைத் தடுப்பதற்கு தமிழினத்தின் ஐக்கியத்தை விரும்பாத தமிழ் துரோகிகள் முயற்சி செய்வார்கள். எத்தனையோ பொய்ப் பிரசாரங்களை செய்வார்கள் அவைகளை நீங்கள் நம்பி விடாதீர்கள்.

அரசியல் துறையில் மிகவும் மமையை ஈழத் தமிழ் மக்கள் அடைவார்கள். அது மாத்திரம் அல்லாமல் மலையகத் தமிழ் மக்கள் அடிமை வாழ்வில் இருந்தும் விடுபட்டு சுதந்திர மனிதர்களாக வாழலாம்;

மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் நிலையை சற்று சிந்தித்துப் பாருங்கள் பரம்பரை பரம்பரையாகவே தொழிலாளர்களாகவே மிக குறைந்த சம்பளம் பெறும் தொழிலாளர்களாக தமக்கென சொந்த காணிகள் இல்லாதவர்களாக தற்காலிகமானவர்களாக நாடு கடத்தப்படக் கூடியவர்களாக கண்ணீரிலே நீந்தி வாழ்வுப் போராட்டத்தில் காலத்தை கழிக்கின்றார்கள்; அவர்களை மனிதருக்கு ஏற்ற முறையில் நடத்தாமல் மிருகங்களாக மதித்து காக்கைப் பிழிந்து வருத்துகின்றார்கள்;

இலங்கையில் தமிழர்கள் தொகை சுமார் முப்பத்தி ஐந்து இலட்சம் அதில் மலையகத்தமிழர்கள் சுமார் பத்து லட்சம். மலையகத் தமிழர்களில் பலரை சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி இந்தியாவுக்கு அனுப்பி இலங்கையில் தமிழர்களின் தொகையை குறைத்து வருகின்றது அரசு. அப்படி செய்வதன் மூலம் மலையகத்திலும் தமிழர்கள் பிரதிநிதித்துவம் பெற முடியாமல் செய்து விடுவார்கள். இதனால் இலங்கையில் தமிழ் பிரதிநிதிகளின் தொகை குறைந்துவிடும். மலைநாட்டு தமிழர்கள் மலைநாட்டு சிங்களவர்களாக மாற்றப்பட்டு விடுவார்கள்.

தணிக்கை

கனக—தவன்.

# அண்ணா நினைவு விழா

தனித் தமிழ் நாடாம் நெடுநகரில் தமிழ் காத்த பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவு கூருமுகமாகக் கடந்த 4-2-72ல் ஓர் கூட்டம் திரு. இரா. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

திரு. க. பசுபதிப்பிள்ளை பண்டிதர் அவர்கள் அண்ணா உருவப்படத்தை திரை நீக்கம் செய்துவைத்தார்;

பின்வருவோர் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினார்:— திருவாளர்கள் க. சதாசிவம் ஆசிரியர் இ. வேலுப்பிள்ளை கா. குமாரசாமி மு குணலிங்கம் க. குமாரவேலு க. கணேசபிள்ளை சே ஜீவரத்தினம் இ. பேரம்பலம்.

திரு. ந. நடராசா அவர்களின் இன்னிசைக்கச்சேரியும் அண்ணாவரலாறு நாடகமும் இடம்பெற்றன.

# பங்களா தேஷ் டைரி

| | |
|---|---|
| 1947 ஜூன் 20 | வங்காள அசெம்பிளி பாகிஸ்தான் பிரிவினைக்கு 56 ஓட்டுகள் ஆதரவாகவும் 21 ஓட்டுகள் எதிராகவும் வாக்களித்தது. |
| 1948 மார்ச் 11 | மொழிப் பிரச்சினை அறப்போரில் முஜீப் கைது. |
| 1950 நவ; 24 | பதின்மூன்று முஸ்லிம் லீக் அங்கத்தவர் வங்காள அசெம்பிளியில் கிழக்கு வங்காளத்துக்கு சுயாட்சி உரிமை கோரினார்கள்; |
| 1952 பிப். 21 | வங்காளமொழிக்கு அரசாட்சியில் இடமில்லை என அரசு தீர்மானித்ததைக் குறித்து மாணவர்கள் கிளர்ச்சி. 19 மாணவர்கள் உயிர்த்தியாகம். |
| 1954 மார்ச் 19 | முஸ்லீம் லீக் தோற்கடிக்கப்பட்டு முதல் கூட்டாட்சி அமைப்பு. |
| 1958 ஜூன் 24 | கிழக்குப் பாகிஸ்தானில் ஜனாதிபதி ஆட்சி; |
| ,, அக். 12 | மௌலானா பஷானி, முஜிபர் கைது; |
| 1960 செப்; 12 | முஜிபர் கைது; 2 ஆண்டு சிறைத் தண்டனை. |
| 1961 செப். 21 | டாக்காவில் அயூப்பை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி. பலர் கைது: |
| 1966 பிப்ரவரி | முஜிபர் ஆறு அம்சத் திட்டத்தை அறிவித்தது. |
| ,, மார்ச் 20 | முஜிபர் கைது; |
| 1967 டிசம்; 17 | அயூப்பை எதிர்த்து ஜனநாயக முன்னணி அமைப்பு. |
| 1968 ஜன. 18 | இந்திய உதவியுடன் கிழக்குப் பாகிஸ்தானைப் பிரிக்கவும் சுயாட்சி அமைக்கவும் முயன்றதாக முஜிபர் கைது; |
| 1969 மார்ச் 25 | ஜனாதிபதி யாஹ்யாகான் ராணுவ ஆட்சி அமைத்துச் சட்டமன்றங்களைக் கலைத்தல்; |
| 1970 டிசம்; 7 | புதிய சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள்; கிழக்குப் பாகிஸ்தான் சட்டமன்றத்திற்கும், பாகிஸ்தான் பாராளுமன்றத்திற்கும் அவாமி லீக் பெரும்பான்மை பலம் பெறுதல்; |
| 1971 மார்ச் 1 | சட்ட மன்றங்களைக்கூட்டுவதை ஒத்திவைப்பதாக யாஹ்யாகான் அறிவிப்பு; |
| மார்ச் 3 | அவாமி லீக் தலைமையில் வரிகொடா இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் தொடங்குதல்: |
| மார்ச் 25 | யாஹ்யாகான் திரும்புதல். உரிமைப்போர் துவக்கம். |
| ஏப்ரல் 13 | சுதந்திர பங்களாதேஷ் அறிவிப்பு. |
| டிசம்பர் 3 | பாகிஸ்தான்-இந்தியா போர் தொடக்கம். |
| ,, 7 | இந்தியா பங்களா தேஷை அங்கீகரித்தல்; |
| ,, 17 | டாக்கா வீழ்ச்சி; சுதந்திரப் போர் வெற்றி; |
| ,, 22 | தற்காலிக அரசு பதவி ஏற்பு: டாக்காவில் மகிழ்ச்சி; |
| 1972 ஜனவரி 8 | ஷேக் முஜிபுர் ரெஹ்மான் விடுதலை; |
| ஜனவரி 12 | ஷேக் முஜிபர் ரெஹ்மான் பங்களாதேஷ் பிரதமராகப் பதவி ஏற்பு |

நன்றி: ஆனந்தவிகடன்.

# பங்களா தேஷ்

பரப்பு:- 1,43,000 சதுர கிலோ மீட்டர்கள் (55,000 சதுர மைல்கள்).

சனத்தொகை:- 7.5 கோடி;

| | | | |
|---|---|---|---|
| மக்கள்:- | முஸ்லிம்கள் | 80.43 | சத வீதம் |
| | இந்துக்கள் | 18.45 | சத வீதம் |
| | கிறிஸ்துவர்கள் | 0.29 | சத வீதம் |
| | பௌத்தர்கள் | 0.74 | சத வீதம் |
| | பிறர் | 0.09 | சத வீதம் |

(சதுர கிலோமீட்டருக்கு 356 பேர்)

முக்கிய நதிகள்:- ஜமுனா, பத்மா, மேக்னா, பிரமபுத்ரா;

விவசாயம்:-

விளை நிலபரப்பு 224 லட்சம் ஏக்கர்
காடுகள் 53 லட்சம் ஏக்கர்
அரிசி 100 லட்சம் டன்
கரும்பு 76 லட்சம் டன்
கோதுமை 58,000 டன்
பருப்பு 47,000 டன்
தேயிலை 29,000 டன்

தொழில்கள்:-

| | | | |
|---|---|---|---|
| நூல் ஆலைகள் | 22 | சணல் ஆலைகள் | 28 |
| சர்க்கரை ஆலைகள் | 7 | அலுமினிய ஆலைகள் | 28 |
| தீக்குச்சித் தொழிற்சாலை | 18 | கப்பல் தளம் | 1 |
| கண்ணாடித் தொழிற்சாலை | 7 | உரத்தொழிற்சாலை | 1 |
| சாயம் ஏற்றும் ஆலைகள் | 173 | காகித ஆலை | 1 |

போக்குவரத்து

புகையிரதப் பாதை 1,752 மைல்கள்
சாலைகள் 2000 மைல்கள்;

ஆதாரம்: ஆனந்த விகடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலும் வீரமும் கலந்த தமிழர் வாழ்வு!

நயினை
நாக. பஞ்சாட்சரம்

ஆதியிலே தோன்றிய மொழி. சரித்திரவாயிலாகவே காலம் அறிய முடியாத தொன்மை வாய்ந்த மொழி காலம் எப்போது என்று கேட்பின் கல்தோன்றி மண் தோன்றாக் காலம் என்று பதில். இப்படி அன்று தொடக்கம் — இன்று வரையும் அழியாப் புகழ் பெற்ற மொழி. இன்று இனம் இழ்ந்து மொழி அழிந்து! கலாச்சாரம் கெட்டு!! பண்பாடு படுகுழியில் தள்ளப்பட்டு வருவது கண்டு என் போன்ற உள்ளங்கள் கொதிப்புக் கொள்வதில் ஆச்சரியமில்லையே!

வீரம்

நாம் 'தமிழனுக்குத் தமிழனே பகைவன்' என்ற உண்மையை மறைக்கலாகாது— வீரபாண்டிய கட்டப் பொம்மன் தொடக்கம் — ஆதித் தமிழ் மன்னர்கள் தொடக்கம் — நல்லூர் சங்கிலியன் வரை — ஏன் இன்று வரை தமிழனைத் தமிழனே காட்டிக் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறான்! — காட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறான்!! இவை எடுதரும் சான்று! அனுபவம் தரும் அதிசயம்!! எனவே தமிழ்ப் பயிர் வளர—தமிழ்ச் சமுதாயம் ஓங்க களை எடுப்பு அவசரம்! அவசியம்!!

ஆதித் தமிழர் விக்கிரக வழிபாட்டை ஏற்கவில்லை: வீரத்தையும், காதலையுமே தங்கள் தெய்வமாகக் கருதினர். போர்க்களத்தில் மார்பிலே வேல் பாச்சப்பட்டு இறந்து கிடக்கும் தனது மகனைக் கண்டு ஈன்ற பொழுதைவிட பெரிது மகிழ்வெய்தினாள் வீரத் தமிழ்த்தாய் ஒருத்தி! இது இன்றைய தமிழ்ப் பெண்களுக்கு புறநானூறு தரும் புத்திமதி! வீரமகவைப் பெற்ற மகிழ்ச்சி அவளுக்கு எத்தனை இன்பத்தை அளித்தது!! அதே பரம்பரையில் வந்த தமிழ்ச் சமுதாயம் தான் இன்று தன் பின்னை காசைக் கொடுத்தேனும் கவுண்மேந்து உத்தியோகத்துக்குப் போகவேண்டும்; என்று கூக்குரலிடுகின்றனர்!

இன்று சகல துறையிலும் தமிழர்கள் பின்னிற்கிறார்கள். இல்லை; பின் நிற்கவில்லை. பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள். எவ்வளவு தூரம் பின் நோக்கித் தள்ள முடியும்?

அண்டை நாட்டுடன் சண்டை செய்த தமிழன் மண்ணாசை கொண்டு நாட்டைப் பிடித்து ஆளவிரும்பவில்லை! வீரத்தை மட்டும் நிலைநாட்டினான்! வெற்றி வாகை சூடி அவர்கள் கொடுத்த திறையை மட்டும் பெற்றான். நாட்டை அவர்களிடமே ஆள விட்டுவிட்டான். இப்படிப்பட்ட தமிழனுக்கு இன்று உலகிலே எங்கும் தனி நாடில்லை. நலம் பேண நாடில்லை. வளம் காண நிலமில்லை!!

கலாச்சாரம்

உலகிலே வாழும் மக்கள் அனைவரையும் தமிழ்க் கலாச்சாரம் கவர்ந்திருக்கின்றது அன்று! இன்றும் அதன் பொலிவு குறையவில்லை; எனினும் நம் நாட்டு-எம் இன-இனம் பெண்களிடத்தில் மேல் நாட்டுக் கலாச்சார மோகம் இடம் பிடித்துக் கொண்டு வருகிறது. வாணிபத்தின் மூலம் வேற்று நாடுகளுக்குச் சென்றான் தமிழன். அவனது கலை, கலாச்சாரம், பண்பாடு வேற்றின மக்களை கவர்ந்தது. மடகஸ்கர், பிஜித்தீவு போன்ற பல இடங்களில் தமிழன் கலாச்சாரம், பண்பாடு பரவலாயிற்று. கலையை வளர்க்க—கலாச்சாரத்தைப் பரப்ப தமிழன் வேற்று நாடுகளுக்குச் சென்றதுகிடையாது.

ஒரு மதத்தின்மீது, ஒரு மொழியின் மீது—ஒரு இனத்தின் பிரதேசத்தின் மீது வேறு மதம்—வேறு இனம்—வேறு மொழி—வேறு நாடு படையெடுப்பது உலகெங்கணும் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் தமிழர்கள் வேறுமொழியின் மீதோ —இனத்தின் மீதோ — அந்த மொழியை அழிக்கவேண்டு —அந்த இனத்தை ஒடுக்க வேண்டும் என்ற காரணங் கொண்டு படையெடுத்தது கிடையாது. அப்படித் தமிழன் படையெடுத்திருப்பானாக இருந்தால் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தோன்றிய தமிழன் இவ்வையத்தையே ஆண்டு கொண்டிருக்கலாமல்லவா?!

எனவே நாடு பிடிக்கும் ஆசை தமிழனுக்கு இருக்கவில்லை: ஆனால் தான் வாழும் பிரதேசத்தில்—தான் இருக்கும் நாட்டில் தஞ்சம் கோரி வருவோரை — அவன் வேறு நாட்டவன்—வேறு இனத்தவன் என்று கூறி வரவேற்காமல் இருந்ததும் கிடையாது: அவனை வரவேற்று தன் நாட்டில் இருக்க இடம் கொடுத்தான் தமிழன். ஆனால் வந்தவர்களோ நச்செண்ணம் கொண்டு வந்தவர்கள் என்று யாரறிவார்! வந்தவர்களெல்லாம் தாம் புகுந்த மண்ணைத் தம்நாட்டு மண்ணுக்கச் செய்த சூழ்ச்சிகளை வஞ்சகம் அறியாத தமிழ் மகன் எப்படி அறிவான்!!

ஆனால்!! ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறுகின்றேன். தன்மானத் தமிழன்—வீரத் தமிழன் — மறத் தமிழன் தான என்றும் அடிமைப்பட்டிருக்க — அடக்கப்பட்டிருக்க விரும்பமாட்டான். தன் மானத்தைக் காக்க கரடு முரடான பாதையெனினும் அதன் வழிசெல்லத் தயங்கான்! விடயத்தை மறந்து வேறு திசை சென்று விட்டேன் மன்னிக்கவும்: கலாச்சாரம் என்றால் என்ன? மனிதாபிமானமே — மன அடக்கமே — சுயநலப்பித்தற்ற பொது நலப்பணியே— தன்னைப்போல் பிறரை நேசிக்கும் தன்மையே— மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள வேறுபாடே கலாச்சாரமாகும்.

கலாச்சாரம் பற்றி பல அறிஞர்களின் கருத்துக்களை எழுதிவிடுவதால்- கலாச்சார விழா எடுத்துவிட்டு சுயநலப் பித்தர்களாக வாழ்வதால் கலாச்சாரம் வளர்ந்து விடாது. அன்றாட மனித வாழ்க்கையில் அது புகுத்தப்பட்டு நடைமுறையில் நடைபெற்றுவரவேண்டும். சகல மக்களும் பண்பாட்டின் வழி ஒழுகவேண்டும். உண்மையான கலாச்சார வழியிலே- தனது வாழ்க்கையைச்சீராக அமைத்த தமிழன் மேல் நாட்டுக் கலாச்சாரத்துக்குத் தலைசாய்ப்பது ஏனோ? தமிழனுடைய கலாச்சாரம் பழக்கவழக்கமான மற்ற சில தமிழர்களாவேயே ... நிலை மோக மாற்றப்படுகிறது. என் அன்புச் சகோதர சகோதரிகளே மேல்நாட்டுமோகம் வேண்டாம் எமக்கு! தமிழன் பண்பாட்டைக் கலாச்சாரத்தைப் பாதுகாத்திடுவோம் முன்வாரீர்!!

காதல்

காதல் தமிழனால் போற்றப்பட்டுவந்த கலை என்பதற்கு பண்டைத் தமிழ் இலக்கியங்களே சான்றாகும். இலக்கிய வரலாறுகளிலே ஓர் தனி இடத்தைப் பிடித்துள்ளது. ஆனால் இன்று நடப்பது காதலா? இல்லவேயில்லை. அது காமவெறி; விலங்குக்கும்- மனிதனுக்கும் உள்ள வித்தியாசத்தை மாற்றும் ஒரு வழி. தமிழன்போற்றிய காதல் எது? பண்பட்ட காதல்; இருவர் கருத்து ஒன்றிய - அன்பால் இணைந்த காதல்; இன்று நடப்பதுபோல் சந்தியில் கண்டவுடன் - சந்தையில் கண்டவுடன்- பேருந்து நிலையத்தில் கண்டவுடன் உண்டாகும் காதல் எல்லாம் காதல் அல்ல.

கம்பரினால் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டதுதான் கம்பராயணம். அதிலே இராமன் சீதையை நோக்குகிறான்; சீதை இராமனை நோக்குகிறாள். இருவருள்ளமும் ஒன்றுகின்றன. என்றாலும் இராமன் யோசிக்கின்றான் அரண்மனைக்குச் சென்றவுடன்!! எனது மனம் பிழையான வழியில் சென்றதா? அவள் வேறு யாருடைய மனைவியாகவும் இருக்கலாமல்லவா என்று; இறுதியிலே எடுக்கின்றமுடிவைக் கவனியுங்கள் "எனது மனம் எப்பொழுதும் வழிதவறிப் போனது கிடையாது! போகவும் மாட்டாது! எனவே இவள் நிச்சயம் ஒரு கன்னியாகத்தான் இருக்கவேண்டும்"!

அவனது உள்ளம் தூய்மையானதாகத் தெரிகின்றது எமக்கு: இதுதான் உண்மைக் காதல்.

இன்றைய காதல் பற்றிக் கூறுவோமெனின் அதன் நடைமுறை பற்றி ஆராய்வோமெனின் அது காமவெறியேயன்றித் தமிழன் போற்றிய காதலல்ல என்

(8ம் பக்கம் பார்க்க)

# யாழ். கம்யூனிஸ்ட்கட்சியில்

## ஊழல்! சுயநலம்! குத்துவெட்டு!

வி. அரியரத்தினம்

"இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் சந்தர்ப்பவாதிகள் நுழைந்துவிட்டதை நானும் உணர்ந்திருக்கிறேன். கட்சியின் புனரமைப்பின் மூலம் மக்கள் மத்தியில் மீண்டும் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான கட்சியாக விளங்க வைக்கும் பணியை மத்திய கமிட்டி மேற்கொள்ளும்" இவ்வாறு வடமாகாண கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராலும், அமைப்பாளராலும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் நடாத்திய பிரத்தியேக கூட்டமொன்றில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா எம். பி. கூறினார்.

இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வட மாகாண கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கில் அதிருப்தியடைந்துள்ள உறுப்பினர் பலர் நல்லூர், சாவகச்சேரி, உடுவில் கோப்பாய், உடுப்பிட்டி தொகுதிக்கிளைகளில் இருந்து வந்திருந்தனர். வருகை தந்திருந்தவர்களுள் யாழ் மாவட்டக்குழு உறுப்பினர் நால்வர் காணப்பட்டனர். தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது இக்குழுவை சந்தித்த டாக்டர் விக்கிரமசிங்கா மேலும் பேசுகையில் உறுப்பினர்களை உணர்ச்சி வசப்படாது இருக்கும்படியும் உட்கட்சிப் போராட்டத்தின் மூலம் கட்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் சக்திகளை வெளியேற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டு அவருக்கு கையளிக்கப்பட்ட மகஜரைக் கவனித்து ஆகவேண்டிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார். பல அங்கத்தவர்களின் ஒப்பத்துடன் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

கம்யூனிஸ்ட் கட்சியின் நிதியிலிருந்து மாதா மாதம் பெருந் தொகையான பணத்தை யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து முழுநேர ஊழியர்கள் ஊதியமாக விழுங்கியும் யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சி சுழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இருக்கிறது: இதற்கு காரணம் என்ன? கட்சியிடம் ஊதியம் பெறும் பிரமுகர்கள் பணத்தைப் பங்குபோடுவதில் மட்டும் போட்டி போட்டுக் கொண்டு தத்தம் இனத்தின் மதத்தின், சாதியின் பெயரால் ஸ்தாபனங்களை கட்டி வளர்ப்பதிலும் ... ஸ்தாபனத்தில் ... னைக் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக் குழுவை நிரப்புவதிலும், அதன் மூலம் கட்சியை தனிப்பட்ட ஸ்தாபனத்தின் கைப் பொம்மையாக்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இதன் பயனாக கட்சியை வளர்க்கவும் கட்சியின் கருத்துக்களை மக்களிடையே பரப்பவும், கட்சிக்கு மக்களின் ஆதரவைப் பெறவும் உழைப்பதற்கு எவரும் இல்லை.

இலங்கையின் மிகப் பெரிய தேசிய சிறுபான்மையினரான தமிழ் மக்களின் மொழி இனப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு கட்சியின் ஆறாவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட பிரதேச சுயாட்சி, பிரதேச மொழி முதலியவற்றை மறந்துவிட்டு அற்ப சலுகைகளுக்காக தமிழினத்தையும், பாட்டாளி வர்க்கத்தையும் காட்டிக்கொடுப்பதையும் தமது நடவடிக்கைகளை குறை கூறும் கட்சி உறுப்பினர்களை காரணம் காட்டாது கட்சியை விட்டு வெளியேற்றுவதையும் ... ... விட்டதன் மூலம் கட்சிக்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும், தமிழினத்திற்கும் துரோகம் இழைக்கின்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியிடம் ஊதியம் பெறும் மாவட்ட செயலாளராக இருக்கும் தோழர் வ. பொன்னம்பலம் அவர்களே தமிழ் மக்களின் பிரச்சினையை கம்யூனிஸ்ட் கட்சி தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லாதபடியினால் தான் "தமிழர் சோசலிச முன்னணி என்ற அமைப்பை உருவாக்க விரும்புகிறேன் என 1969ம் ஆண்டு மார்கழி மாதம் விளக்கம் கொடுத்திருந்தார்;

லஞ்சமும், ஊழலும், மோசடியும் வட பிரதேச கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களின் அன்றாட வாழ்க்கையின் அம்சமாக மாறிவருவதைக்கண்டு கண்டனம் தெரிவிக்கும் சாதாரண உறுப்பினர்கள், கட்சியின் ஆரம்ப நாட்கள் முதல் கட்சிக்காக உழைத்தவர்கள் கட்சிக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவதில்லை. இதன் மூலம் கட்சிக்கு மக்களிடையே வெறுப்பை வளர்க்கும் பேர்வழிக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது; மாவட்டச் செயலாளர் அமைப்பாளர் பதவிகளும் மாவட்டக்குழு அங்கத்தவர்கள் பதவிகளும் ஜனநாயக ரீதியில் வோட்டெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவது தடை செய்யப்பட்டுவிட்டது. கட்சியின் தலைமைப் பீடத்தால் வழங்கப்படும் கட்சி அங்கத்துவ அட்டைகள் கனவாக இங்கே அச்சடிக்கப்பட்டு யாழ் மாவட்ட செயலாளர் யாழ் மாவட்ட அமைப்பாளர் இருவரின் கையாட்களுக்கு கொடுக்கப்பட்டு செயலாளருக்கும் அமைப்பாளருக்கும் சாதகமான பெரும்பான்மை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மோசடி வெளிவந்ததும் கட்சிக்காரியாலயத்தில் முழு நேர ஊழியராக வேலை செய்த இற்றாழியர் ஒருவர் மீது பழியைப் போட்டு அவரை தண்டனைக்கு உள்ளாக்கி விட்டனர்";

இது இப்படியிருக்க டாக்டர் விக்கிரமசிங்காவுக்கு யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் அளித்த வரவேற்பையும், கட்சிக் காரியாலயத்தில் நடந்த கூட்டத்தையும் யாழ் மாநகர சபையில் டாக்டர் விக்கிரமசிங்க பங்கு பற்றிய கூட்டத்தையும் யாழ் பிரதேச கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பாளர் திரு. அ. வைத்திலிங்கம் பகிஷ்கரித்ததையிட்டு பலவாறுன பேச்சுகள் அடிபடுகின்றன;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தேவநாயகத்தின் திருப்பம்!

கல்குடா நாடாளுமன்ற உறுப்பினர் திரு: தேவநாயகம் அவர்கள் புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்க முடிவு செய்திருப்பதை இலங்கைத் தமிழினம் மகிழ்ச்சியோடு வரவேற்கிறது:

தியாகராசா, அருளம்பலம், ஆனந்தசங்கரி, ராஜன் செல்வநாயகம் தம்பிராஜா ஆகியோரும்—கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்பேசும் இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் திரு; தேவநாயகத்தின் முன்மாதிரியைப் பின்பற்றினால் நாம் இன்னும் பன்மடங்கு மகிழ்ச்சியில் திளைப்போம்;

இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வேளை: இந்த வேளையில் புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்காத தமிழர்கள் உலகின் முதல் தர முட்டாள்களாகவே இருப்பார்கள், காலம் காலமாக இலங்கைத் தமிழர்கள் காறி உமிழ்ந்து தூற்றும் காக்கை வன்னியர்களாய்—எட்டப்பர்களாய் அவர்கள் ஆகிவிடுவார்கள்.

புதிய அரசியல் சட்டம் எல்லா வகையிலும் இலங்கைத் தமிழ்பேசும் மக்களுக்கு அநீதி இழைத்துள்ளது; வரிக்கு வரி தமிழினத்துக்கு குழிபறிக்கும் வாசகங்கள் போடப்பட்டுள்ளன. இலங்கையின் சிறந்த அரசியல் வாதியும்—சட்ட அறிஞருமான முன்னாள் முதலை உறுப்பினர் திரு. எஸ். நடேசன் தெளிவாக இதனை எடுத்துக் கூறியுள்ளார்.

ஏன் திரு: நடேசனை நாங்கள் எடுத்துக் கூறுகிறோம் என்றால் அவர் தமிழரசுக் கட்சிக்காரர் அல்ல என்பதால்தான்—தமிழரசுக் கட்சிக்காரர்கள் எதைச் சொன்னாலும் எதிர்க்க வேண்டும் என்று வாழும் சிலரது உள்ளங்களைத் தொடுவதற்காகத்தான்!

கல்குடா நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தேவநாயகம் யு; என். பி.யைச் சேர்ந்தவர்; மிகத் துணிச்சலாக "புதிய அரசியல் சட்டம் தமிழருக்கு அநீதி இழைக்கிறது" என்று கூறி இருக்கிறார். இவ்வேளையில் திரு. தேவநாயகம் அவர்களுக்கு நாம் இன்னொரு உண்மையை சுட்டிக்காட்டவும் கடமைப்பட்டுள்ளோம்;

யு என். பியில் பல சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரையாவது "இப்புதிய அரசியல் சட்டம் தமிழனுக்கு அநீதி இழைக்கிறது" என்று உங்களால் சொல்ல வைக்க முடியுமா? ஒருசிங்கள யு; என். பி. நாடாளுமன்ற உறுப்பினரும் அப்படிச் சொல்ல மாட்டார், ஆகவே இந்த நேரத்திலாவது யு. என். பியும் தமிழருக்கு மாறானதுதான் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள். அதுமட்டுமல்ல, தமிழரின் உரிமைகள் பற்றிச் சிந்தித்து—வாழ்வு பற்றிச் சிந்தித்து—உழைத்துவரும் எங்கள் பக்கம் வாருங்கள். உங்களை மகிழ்ச்சியோடு நாங்கள் வரவேற்போம்;

கிழக்கு மாகாணத்தில்— குறிப்பாக கல்குடா தொகுதியில்— காடுகளிடையே சிங்கள மக்களைக் குடியேற்றும் சதி நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது: அப்போதெல்லாம் நாங்கள் திரு: தேவநாயகம் அவர்களின் மனத்தை உறுத்த... போல் நிலைமையை விளக்கி எழுதியும் பேசியும் வந்துள்ளோம்;

இன்று திரு; தேவநாயகம் அவர்களின் அரசியல் போக்கில் காணப்படும் திருப்பம் நிலையானதாகவும்—உறுதியானதாகவும் இருக்குமானால் எங்களைவிட மகிழ்பவர்கள் வேறு யாரும் இருக்கமுடியாது.

மும்மூர்த்திகளே! தேவநாயகம் அவர்களின் துணையால்—அவர் வளர்த்த பிள்ளைகளாய் மட்டக்களப்பு அரசியலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தம்பிராசாவே! ராஜன் செல்வநாயகமே! உங்கள் கண்களைத் திறப்பது போல்—உங்கள் கருத்து வரட்சியை அகற்றுவதுபோல்—திரு. தேவநாயகம் 'புதிய அரசியல் சட்டத்தை' எதிர்க்கப் புறப்பட்டிருக்கிறார்—இனியாவது விழிப்புணர்ச்சி பெற்று எழுங்கள்!

நீங்கள் துரோகம் செய்யக்கூடாது என்றுகூட நாங்கள் சொல்லவில்லை. 'புதிய அரசியல் சட்டத்தை' ஆதரிப்பது போல் பெரிய துரோகத்தையாவது செய்யாதிர்கள் எனறே மன்றாடுகிறோம்;

திரு. தேவநாயகத்தின் திசையில் திருந்திப் புறப்படுங்கள்!

# வங்காளதேசத்தின் நிலையும் தமிழ் ஈழத்தின் நிலையும் ஒன்றே!

## அமரதாசபெர்ணண்டோவுக்கு அரசியல்பாடம்!

26-2-72இல் வெளியான ஆங்கில ஏரிக்கரை பத்திரிகையில் மூஜிபரும், தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளும்' என்ற தலையங்கத்தின் கீழ் வெளியான செய்தியிலிருந்து திரு. அமரதாச பெர்ணண்டோ என்பவர் இலங்கையின் உண்மையான அரசியல் நிலையை வங்கப் பிரதமருக்கு எடுத்து இயம்பவில்லை என்பது தெட்டத்தெளிவு; இதோ தருகிறோம் வங்கத்திற்கும் எமக்குமான ஒற்றுமைகளை:

### மொழி

மூன்றில் ஒரு பங்கு தமிழ் பேசும் மக்களைக் கொண்ட எமது நாட்டில் தமிழுக்கும் உரிய இடம் கொடுக்கப்படாமல் அதே நேரத்தில் சிங்களமே அரசாங்க மொழியாக்கப்பட்டுள்ளது. தமிழ் இடங்களில் உள்ள நீதி மன்றங்களில் தமிழைப் புறக்கணித்து சிங்களத்தையே நீதிமன்ற மொழியாகப் புதிய அரசியல் அமைப்பு வழிவகுக்கின்றது. புதிய அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்த பின்னர் தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தமது தாய்மொழியில் தொடர்பு கொள்ள இயலாத நிலைக்கு ஆளாக்கப்படுவார்கள்.

விடுதலையடைந்த வங்கம் எடுத்த முதல் நடவடிக்கை தமது தாய்மொழியை அரசாங்க மொழியாகப் பிரகடனப்படுத்தியதே ஆகும்: இந்த நடவடிக்கையிலிருந்து பாகிஸ்தானிலும் மொழிப் பிரச்சினை நிலவியதென்பது வெள்ளிடை மலை;

### சமயம்

புதிய அரசியலமைப்பின் கீழ் பௌத்த மதமே அரசாங்க மதமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. மற்றைய மதங்களைச் சார்ந்த மக்களின் செலவில் பௌத்த மதம் பேணிக் காத்து வளர்க்கப்படும் அதே வேளையில் மற்றைய மதங்கள் உதாசினப்படுத்தப்படுகின்றன. தொண்ணூறு வீதமும் முஸ்லீம்களை கொண்ட நாடான பாகிஸ்தானே பிளவு படுவதைத் தடுக்க முடியவில்லை: ஆனால் இவ்விடத்திலோ மதக் காரணமாகவும் பிளவு ஏற்பட்டுள்ளது. இது நிச்சயமாகப் பிரிவினைக்கு வழிவகுக்குமென்பதில் சந்தேகமில்லை.

### குடியேற்றம்

குடியேற்றத் திட்டமென்ற போர்வையில் தமிழ் மக்களை அவர்களுடைய தாயகத்திலேயே சிறுபான்மையினராக்குவதற்காகத் திட்டமிடப்பட்ட ஊடுருவல் நடைபெறுகின்றது. இந்நடவடிக்கை ஈழத் தமிழரின் பலத்தைப் புதிய தேசிய சபையில் வெகுவாகக் குறைக்கும் ஏதுவாகவிருக்குமென்பது எவரும் மறுக்கமுடியாத உண்மையே.

### கல்வியும், பல்கலைக்கழகப் பிரவேசமும்

ஒரே பாடசாலையிற் கல்வி பயின்று, ஒரே பரீட்சையைச் செய்யப் புகும் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களிலும் பார்க்க அதிகப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டால்தான் பல்கலைக்கழகத்தினுள் அடியெடுத்து வைக்க இயலும். இது தமிழ் மக்களுக்கு எதிராகக் கடைந்தெடுக்கப்பட்ட பாரபட்சமான செய்கை என்பது சகலரும் சால [illegible] வர்களின் அமைதியின்மைக்கும், புரட்சியின் வெற்றிக்கும் ஏதுகோல்;

### தொழில்

தொழில்கள் வழங்கப்படுவது இனவடிப்படையிலேயன்றி, முயற்சி, திறமைகளுக்கிணங்க அல்ல. தமிழ் மகனிற்கு வேலை வாய்ப்பின் நிமித்தம் மூன்று மொழிகளையும் கற்கவேண்டிய நிர்ப்பந்தமும், அதே நேரத்தில் சிங்களத் தோழன் ஒரேயொரு மொழியை — அதுவும் தனது தாய் மொழியை மட்டும் பயின்றால் போதுமென்ற நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது. அத்துடன் உயர் பதவிகளும், பௌத்த சிங்களவருக்கே உரித்தாக்கப்பட்டுள்ளது ஈண்டு குறிப்பிடத்தக்கது. விடுதலை வங்கம் புதுமெருகுடன் மலர்ந்ததற்கு இதுபோன்ற காரண காரணிகளே காரணமாகும்.

### மொழிச்சிதைவு

எமது தூய தாய் மொழியாம் தமிழ் மொழியை மாசுபடுத்தும் நோக்கத்துடன் இடி முழக்கத்தினால் வெடித்த காளானைப் போன்ற மொழியை வலோற்காரமாகப் புகுத்துவதன் மூலம் தமிழ் மழலையின் தொண்டைக்குள் அம்மொழி திணிக்கப்படுகின்றது. உதாரணமாக லக்சலா சலுசலா, லங்காசம, சல்பில ஜாதிகபொல, ஜாதிகசம்பத போன்றவை.

### கலாச்சாரத் தொடர்பு

எமது காலாசாரத்தினுள் புதுமையும், இழிவுமான பல மேலைத்தேய சஞ்சிகைகள் கோடி கொடுத்து இறக்கப்படும் அதே நேரத்தில் தமிழகத்திற்கும் எமக்கும் இடையில் தொடுபாலம் போலான கலாச்சாரத் தொடர்பை வேரோடு துண்டிக்கும் நோக்குடன் தமிழ் சஞ்சிகைகள்-திரைப்படங்கள் முதலியவைகளைத் தடை செய்வது உலகெங்கும் நடைபெறாத புதுமை:

திரு: அமரதாச பெர்ணண்டோ அவர்களே சமஷ்டி என்பது அதிகாரப் பரவலேயன்றி நாட்டுப் பிரிவினையல்ல என்பது நீர் அறியாத உண்மையல்ல. இக்கருத்தைத்தான் தமிழரசுக்கட்சி அன்று முதல் இன்றுவரை அரசினற்கு இடித்துரைத்து எடுத்துக் கூறிவந்தது.

## தணிக்கை ........

—நிரஞ்சலா

## கிழக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தன் உணர்ச்சியை வெளிப்படுத்தினார்;

'சீ... இது என்ன அரசியல் சட்டம்... தமிழனுக்கு இந்த புதிய அரசியல் சட்டத்தில் பிச்சை அளவு சலுகை கூட இல்லையே' என்ற தன்னுடைய ஆத்திரத்தை ஒரு கூட்டத்தில் வழமையான தனது பாணியில் தெரிவித்தார் அறப்போரணித் தலைவர் அரியநாயகம்!

# தமிழரின் நண்பர்கள் யார்? துரோகிகள் யார்?

இலங்கையில் வரையப்பட்டுள்ள புதிய அரசியல் சட்டம் தமிழ் மொழிக்கும் தமிழினத்திற்கும் அநீதி இழைத்து தமிழர்களை முற்றாக அழித்து ஒழித்துவிடும் கொடிய அரசியல் சட்டமாகும்எனக்கூறுவோர் விபரம்:-

### அமைப்புக்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சி, சுயாட்சிக் கழகம், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, தமிழ்க் காங்கிரஸ் அனைத்திலங்கைத் தமிழ்த் தாய் மன்றம், தமிழ் மாணவர் பேரவை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் கழகம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், தமிழ் மொழிபெயர்ப்பாளர் சங்கம், தமிழ் தட்டெழுத்தாளர் சங்கம், துறைமுக நாவாய் இயக்குநர் சங்கம், துறைமுக வழிகாட்டி அத்தியாவசிய ஊழியர் சங்கம், மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கம், இலங்கை பஸ் தொழிலாளர் கழகம், துறைமுக கூட்டுத்தாபன தமிழ் ஊழியர் சங்கம், புகையிரத ஊழியர் சங்கம், வல்வை ஒற்றுமை முன்னணி;

### பிரமுகர்கள்

திரு. ஹென்றி பேரின்பநாயகம், யாழ்ப்பாணம். திரு. க. நேசையா, திரு. எஸ் நடேசன், [முன்னாள் முதலை உறுப்பினர்] திரு. ஏ. தவராசா, [வழக்கறிஞர் மட்டக்களப்பு] மாதாஜீ சச்சிதானந்த சரசுவதி. [சிவானந்த தபோதனம் திருகோணமலை]

இலங்கையில் வரையப்பட்டுள்ள புதிய அரசியல் சட்டம் தமிழினத்துக்கு தீமை புரியவில்லை எனக்கூறும் துரோகிகள் விபரம்—

### அமைப்புக்கள்

வட — கிழக்கு மாகாண சிறீலங்கா சுதந்திரக் கட்சி, வட — கிழக்கு மாகாண கம்யூனிஸ்ட் கட்சி, வட — கிழக்கு மாகாண சமசமாஜக் கட்சி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பீக்கிங் கம்யூனிஸ்ட் கட்சி;

### பிரமுகர்கள்

குமாரசூரியர், அல்பிரட் துரையப்பா, தியாகராசா, பா. உ: அருளம்பலம், பா; உ: ஆனந்தசங்கரி, பா; உ; ராஜன் செல்வநாயகம், பா; உ. எம். சி; சுப்பிரமணியம் பா; உ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்திற்கு அப்பால் தமிழின் செல்வாக்கு

**பல்கலைச் செல்வர் தெ. பொ. மீ.**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இலக்கியத்தில் வடமொழி இயலிலேயே இப்போது உலகத்தின் நாட்டம் திரும்பியுள்ளது; அதனால் எல்லா மொழிகளையும் முடியும் பொதெல்லாம் ஆராயும் மனப் போக்கு வளர்ந்துள்ளது. தமிழர்கள் யாரேனும் கிடைக்கும் போது தமிழைக் கற்றுக் கொள்வதும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் வழக்கமாகி வருகிறது. அதோடு உலக நோக்குடைய நாடுகளே இன்று முன்னணியில் நிற்கின்றன. பிரிட்டிஷ் பேரரசு உலகினை ஆண்ட பொழுது பேரரசின் மொழிகள் அனைத்தையும் கற்பதற்குரிய ஏற்பாடு ஆங்கிலநாட்டில் இருந்தது. சிறம்பாகத் தமிழைக் கற்கவும் வய்ப்பு இன்றும் உண்டு. அதே போலச் சோவியத் நாட்டிலும், பிரான்சிலும், ஜெர்மனியிலும், அமெரிக்காவிலும் இந்தப் போக்கு வேரூன்றி வளர்கிறது.

## அமெரிக்காவில் தமிழ்

சென்ற உலகப் போரின் போது உலக உறவு வளரத் தொடங்கியது. அமெரிக்கா தன் படைகளை வெளிநாட்டினர்க்கு உதவியளிக்க அனுப்பியபோது அப்படை வீரர்கள் ஊமைபோல் அந்த நாட்டினரோடு தொடர்பு கொள்ளாமல் வாழ்வதை விரும்பவில்லை; அந்நாட்டு மொழிகளைக் கற்று, பின்னரே படை வீரர்கள் அனுப்பப் பெற்றனர். இந்த முயற்சி வெற்றிபெற, மொழித் துறையினர் மொழி கற்பிக்கும் தொண்டில் ஈடுபட்டு ஓரளவு வெற்றியும் கண்டார்கள். மொழியைக் கற்பிக்கும் முறையும் சிறந்து வளருவதாயிற்று. இதனால், ஏதோ, போருக்கு வந்து திரும்பும் நாடோடிகளாக அல்லாமல் அவ்வந்நாட்டினரின் உண்மை நண்பர்களாகவும் மாறி அவ்வந்நாட்டு மக்களோடு ஓரளவு கூடிக் குலாவவும் முடிந்தது. பிறநாடுகளைப் பற்றியும் பண்பாடுகளைப் பற்றியும் நேரில் பேசி அறிந்த அறிவும் பரவலாயிற்று. இதனைக் கண்ட பின்னர் தேசிய பாதுகாப்புக் கல்விச் சட்டம் ஒன்றினை அந்நாடு இயற்றியது. பிறநாடுகளின் வரலாற்றையும், மொழியையும், பண்பாட்டையும் அறிந்து கற்று ஆராய நிறையப் பணத்தை தனது வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கலாயிற்று. பல பல்கலைக்கழகங்கள் இதனைப் பயன்படுத்த முன்வந்தன. அந்தச் சட்டத்தின் பெயரே இந்தத் தொண்டை எவ்வளவு சிறப்பினதாக அம்மக்கள் கருதினர் என்பதைத் தெரிவிக்கிறது. சிகாகோவிலும், பென்சில்வேனியாவிலும், கோர்னலிலும், பர்க்லியிலும் தமிழ் கற்பிக்கத் தொடங்கினர். சிகாகோவில் இதனைத் தொடங்கி வைத்து தொண்டாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கேயும் பிற இடங்களிலேயும் இந்தத் தொண்டு தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. நூல்கள் இதற்கென வெளிவருகின்றன. தமிழ்மொழி ஆராய்ச்சியும் புதிய புதிய துறையில் வளர்ந்து கொண்டே போகிறது.

## சோவியத் நாட்டில் தமிழ்

இந்தப் போக்கினை சோவியத்து நாடுகளும் பின்பற்றுகின்றன. மாஸ்கோவில் தமிழ் ஆராய்ச்சியும், தமிழ் வரலாற்றுஆராய்ச்சியும், தமிழ் சமைய ஆராய்ச்சியும் செய்வாரோடு தமிழ் நூல்களை மொழிபெயர்ப்போரும் உண்டு. திருக்குறள், கம்பியின் அலையோசை, சங்கப் பாடல்களில் சில, சிலப்பதிகாரம்—இவை ருஷ்யமொழியில் வெளியாகியுள்ளன. நம் நாட்டிலிருந்து பல தமிழறிஞர்கள் தமிழ்த் தொண்டு செய்ய அங்கே சென்றிருந்தார்கள். டாக்டர் ஆந்திரனேவ் முதலியவர்கள் இங்கும் வந்துபோய் உள்ளனர். தமிழ் நூற் சுவடிகள்—ஓலைச் சுவடிகள் மாஸ்கோ நூல் நிலையத்தில் உள்ளன.

லெனின் கிராடில் தமிழ் கற்கும் மாணவர்கள் ஆண்டு தோறும் தேர்ச்சி பெற்று வெளியேறுகின்றனர். தமிழ் நாடறிந்த செம்பியன் என்ற ரூடின் என்பவர் அங்குத் தமிழாசிரியராகத் தொண்டாற்றுகின்றார். செக்கோஸ்லெவோக்கியாவின் தலைநகரான பிராகுவில் சார்லஸ் பல்கலைக் கழகத்தில் டாக்டர் கமில்ட் ஜ்வல்பெல் தமிழ்த் தொண்டாற்றித் தமிழ் செல்வங்களையும் "பஞ்சும்—பசியும்" போன்ற இந்நாளைய நாவல்களையும் மொழிபெயர்த்து ஆயிரக்கணக்கில் பரப்பியுள்ளார்: பின், சிகாகோவிலும் பணியாற்றினார். இப்போது ஹாலந்தில் தமிழ்த் தொண்டாற்றப் போயுள்ளார்; கிழக்கு ஜெர்மனியிலும் தமிழ் கற்கும் முயற்சி உண்டு:

## மற்ற மேற்கு நாடுகள்

மேற்கு ஜெர்மானியப் பல்கலைக் கழகங்களில் இந்தியத் துறை உண்டு: முன் எல்லாம் வடமொழியையே ஆராய்ந்த அவை இன்று தமிழையும் ஆராயத் தொடங்கியுள்ளன; இங்கிருந்து தமிழாசிரியர்கள் உதவிசெய்யப் போய்க்கொண்டிருக்கின்றார்கள்: மொஹஞ்சதாராப் பண்பாட்டின் சின்னங்களில் எழுத்துக்களை ஆராய்வதில் கணக்கு எந்திரத்தைப் பயன்படுத்தியது மாஸ்கோ பல்கலைக்கழகமே: பின்னர், பின்லாந்து ஆசிரியர்கள் சுவீடன் நாட்டில் இத்தகைய ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்துவருகிறார்கள்: இவர்களுக்கு உதவத் தமிழறிஞர்கள் அங்கே போகவும் செய்கிறார்கள். ஹாலந்திலும் இப்போது டாக்டர் கமில்ட் ஜ்வல்பெல் தமிழாராய்ச்சி செய்வதனை முன்னரே குறித்தோம். ஸ்பெயினிலும் இந்தியத்துறையில் தமிழ் பண்பாட்டை ஒரு சிறிது ஆராய ஏற்பாடு செய்துள்ளனர்; ஆஸ்ட்ரியா, இத்தாலி முதலிய நாடுகளிலும் இந்தப் போக்கு வளர்ந்துவருகிறது. ஆஸ்ட்ரேலியாப் பல்கலைக் கழகங்களைப் பற்றியும்கொரியாவைப் பற்றியும் ஜப்பானைப் பற்றியும் முன்னரே குறிப்பிட்டோம்;

## பிரான்சில் தமிழ்

புதுச்சேரி முதலிய தமிழூர்கள் பிரெஞ்சுப் பேரரசுக்கு உட்பட்டிருந்த காலம் உண்டு. எனவே, பிரான்சுக்கு தமிழாராய்ச்சி புதியதல்ல; புதுச்சேரியில் இந்திய இயல் கல்லூரி, டாக்டர் பிலியோசாவின் மேற்பார்வையில் ஆராய்ச்சிசெய்து வருகிறது; சங்கத் தமிழ் சொற்களின் அகராதி, தமிழ்நாட்டு ஆகமங்கள், தமிழ்நாட்டு செப்பேடுகள், தமிழ்நாட்டு விக்கிரகங்களின் புகைப்படங்கள், பரிபாடலின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு முதலியன இந்த ஆராய்ச்சி நிலையத்தில் கனிந்த கனிகள்: டாக்டர் பிலியோசா, "கோலேஜ்—து—பிரான்ஸ்" என்ற பாரிஸ் நிலையத்தில் தமிழும் தமிழ் நாட்டுப் பண்பாடும் கற்பிப்பவர். அவரே, பலதேச தமிழாராய்ச்சிக் கழகத்தின் தலைவர் மூன்றுவது உலகத் தமிழ் கருத்தரங்கு மாநாடு இவரது துணைகொண்டே பாரிஸில் வெற்றியுடன் நிறைவேறியது.

## ஆங்கிலவர் தமிழ்ப்பணி

ஆங்கில நாட்டைப்பற்றிக் கூறவேண்டாம்: லண்டன் கீழைக் கல்விப் பள்ளி என்ற நிறுவனத்தில் சிறப்பாக அமைந்தது: அதன் தமிழ்த் துறை: டாக்டர்மார் என்பவர் அங்கே தமிழ்த் தொண்டாற்றிவருகின்றார்: அவரோடிருந்த டாக்டர்ஆஷர்மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஸ்காட்லாந்து பல்கலைக்கழகத்திற்கு போய்விட்டார். பல தேசத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் இணைச்செயலாளரில் ஒருவர் இவர்;

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் வடமொழிப் பேராசிரியராக விளங்கும் டாக்டர் பர்ரோ என்பவர் வடமொழியில் விளக்கங்கூற முடியாத சொற்கள் பல இருப்பதனைக்கண்டு, இவை திராவிட மொழியைச்சேர்ந்தனவோ என்ற ஐயம் கொண்டு, திராவிட மொழி ஆராய்ச்சிக்கு வந்தார்: அமெரிக்க பர்க்கிலிப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த வடமொழிப் பேராசிரியரும் மொழி இயல் பேராசிரியருமான டாக்டர் எமனோ என்பவரும், இப்படியே திராவிட மொழி ஆராய்ச்சிக்கு வந்தவர்; இவர்கள் திராவிட மொழிப்பகுதிகளுக்கு நேரில் வந்து ஆராய்ந்து எழுதிய ஆராய்ச்சி நூல்கள் தலை சிறந்தன: இந்த நூல்கள் திராவிடமொழி ஆராய்ச்சிக்குத் தூண்களாய் அமையத்தக்கவை. தமிழாராய்ச்சிக்கும் பெரிதும் உதவுவதற்கு இவர்களிருவரும் திராவிடச் சொல் அகராதி ஒன்று வெளியிட்டுள்ளனர். இன்றுவரை நாம் அறிந்துள்ள திராவிட மொழிகளில் குறைந்தது இரண்டிலேனும் காணும் சொற்களைத் தொகுத்து ஒப்புமை காட்டி விளக்கம் தந்துவெளியிட்டுள்ளார்கள் இது விலையில்லாத மூலபண்டாரம் எய்ப்பினில் வைப்பு. இவற்றை ஒட்டி திராவிட மொழி ஆராய்ச்சி இந்தியாவில் பல இடங்களிலும் உலகின் பிற இடங்களிலும் வெற்றி நடைபோடக் காண்கிறோம்.

இந்த வகையான செல்வாக்கினாலேயே உலகில் தமிழுக்குந் தனி இடம் உண்டு என்பது தெளிவாகிறது: இந்திய நாட்டு மொழிகளிலும் உலக மொழிகளிலும் தமிழ் நூல்கள் மொழிபெயர்க்கப்படுகின்றன; உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு முதலில் கோலாலம்பூரிலும், (இரண்டாம் மாநாடு) சென்னையிலும், மேலும் இரண்டாண்டுகளுக்குப் பின் (மூன்றும் முறை) பாரிசிலும் சிறப்பாக அறிஞர் பாராட்டும் வகையில் நடைபெற்றது; நான்காம்முறை இலங்கையில் வருகிற ஆண்டில் நடைபெற இருக்கிறது. இதன்பயனாக, யுனெஸ்கோவின் நன் முயற்சியால் பல தேசத் தமிழாராய்ச்சி நிறுவனமும் சென்னையில் வளர்கிறது;

---

# "பழைய ஊழியர்களிடம் சிங்களத் தேர்ச்சி கோருவது சட்ட விரோதமானது"

## துறைமுகக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு ஈழத்துநாதன் ஆட்சேபம்!

"திருக்கோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து திருக்கோணமலைத் துறைமுகத்தில் தனியார் நிறுவனங்களில் வேலை செய்தவர்களை துறைமுக (சரக்கு)க் கூட்டுஸ்தாபனத்தில் வேலைக்கமர்த்தினீர்கள். இப்படி வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியர்கள் பதவி உயர்வுபெறுகின்ற விடயத்தில் அரசகருமமொழித் தகைமை பெரும் இடர்பாட்டைக் கொடுக்கின்றதோடு சட்டரீதியாக அவர்களுக்கு அளிக்கப்பட்ட விதிவிலக்கினையும் மீறுகின்றது;

"1958ம் ஆண்டின் 13ம் இலக்கச் சட்டத்தின் உட்பிரிவு 52 (1)ன் கீழ் மேற்படி தனியார் துறை ஊழியர்கள் துறைமுக (ச) கூட்டுஸ்தாபனத்தில் தமது பழையசேவை ஒப்பந்தங்களின் அடிப்படை[illegible] யில் வேலைக்குச் சே[illegible] புண்டு இதன்படியேதான் இத்தனியார்துறை ஊழியர்களை நீங்கள் 1956ம் ஆண்டின் அரசகரும மொழிச்சட்டத்திற்குக் கட்டுப்படவேண்டிய நிர்ப்பந்தமில்லாத "பழைய" ஊழியர்களாகக் கூட்டுஸ்தாபனச் சேவையில் சேர்த்துக்கொண்டீர்கள்;

'இவ்விதம் பழைய ஊழியர்களாகச்சேர்த்துக்கொண்டோரை இப்பொழுது நிர்வாகரீதியில் 'புதிய' ஊழியராகக் கூட்டுஸ்தாபனம் கணிக்கின்றது. அதாவது பழைய ஊழியராக நியமனம் பெற்றோர் பதவி உயர்வு பெறுங்கால் கூட்டுஸ்தாபனத்தால் 'புதிய' ஊழியராகக் கணிக்கப்பட்டுச் சிங்களம் படிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்; சம்பள உயர்வு முதலியன இந்நிலையில் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றது;

'அரசாங்க[illegible] [illegible]ஒப்ப[illegible]தைச் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது; அரசாங்க சேவையில் பழைய ஊழியர் நிலையை விளக்கும் திறைசேரி சுற்று நிருபம் 700 இவ்விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றது;

'அரசாங்க சேவையில்கூட பழைய ஊழியர்களுக்கில்லாத ஒரு இடர்பாட்டை கூட்டுஸ்தாபனம் எக்காரணம் கொண்டும் புகுத்தமுடியாது என்பதைத் தெரிவிப்பதுடன் 'பழைய' ஊழியர்கள் பதவி உயர்வுகளைப் பெறும்பொழுதும் தொடர்ந்தும் 'பழைய' ஊழியர்களாகவே இருப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்."

—மேற்கண்டவாறு இலங்கைத் துறைமுக தொழிலாளர் கழக திருகோணமலைக் கழக செயலாளர் திரு. செ. ஈழத்துநாதன் துறைமுக சரக்கு கூட்டுத்தாபனத்தலைவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## வண்ணை கலைவாணர் நாடகமன்றம்

1972ம் ஆண்டிற்கான பொதுக்கூட்டம் 9.1.72ல் செல்லம்ஸ் ஸ்ருடியோவில் நடைபெற்ற கீழ்கொண்டோர் உத்தியோகஸ்தர்களாகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்;

தலைவர்:— திரு: செ: பாண்டித்துரை (நீதிமன்ற விற்பனை ஆணையாளர் மல்லாகம்)

துணைத் தலைவர்கள்:— திரு. மு: ஆலால சுந்தரம்; (வழக்குரைஞர்) திரு. ச. பாலசிங்கம். (சங்கீதபூசணம்)

இணைச்செயலாளர்:— திரு. தா. ஐ. லோகநாதன் திரு: பொ. பரமநாதன்.

பொருளாளர்:— திரு. பி: நீக்கலஸ்.

செயற்குழு:— திருவாளர்கள்:— பொ: இளையதம்பி (சங்கீதபூசணம்) வ. பாலசிங்கம் கே. கே. வி. செல்லையா த. தியாகராசா க. தா. கணபதிப்பிள்ளை (அச்சுவேலி இ. ச. துணைத்தலைவர்)

இசைப் பகுதி துணைக்குழு; சங்கீதபூசணம். ச. பாலசிங்கம். பொ. இளையதம்பி க; தா: கணபதிப்பிள்ளை. (அச்சு இ. ச. துணைத்தலைவர்) இ; கிருஷ்ணமூர்த்தி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வெளிப்பேணி"

சித்திரை மாத வெய்யில் சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது. நீண்ட அந்த நெடுஞ் சாலையில் நிழல் கொடுக்க அருமையான ஒரு இடம் இந்த முச்சந்தியில் அமைந்திருக்கும் சந்திரா கபே தான்! சந்திரா கபேயின் மேற்குப் புறத்தில் ஒரு இருபது யார் தள்ளித்தான் சிவன் கோவில் அமைந்திருக்கிறது. சந்திரா கபேக்கும் சிவன் கோவிலுக்கும் நெருக்கமான தொடர்பு இல்லாமல் இல்லை... தாழ்த்தப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்குவதில் கோவிலும் கடையும் ஒரே ரகம் தான்!

சந்திரா கபேக்குத்தான் ஆத்திக அடியவர்கள் திரள் திரளாக வருவார்கள்; காரணம் தாழ்ந்த ஜாதிக்காரர்கள் இங்கே சரியான முறையில் தரம் பிரிக்கப்பட்டு உரிய முறையில் 'கௌரவிக்கப்' படுவதால்தான்! கிராமப்புறங்களில்தான் இந்த மிருகத்தனம் அதிகம் நிலவுகிறது!

தேனீர் கடைப் பிரவேசம் என்ற பெயரில் முன்பு ஒரு முறை இங்கே கிளர்ச்சி நடந்த போது சாதி வெறி பிடித்தவர்களின் சண்டித்தனமும் பாதுகாப்பில்லாத அரசாங்க சட்டதிட்டங்களும் கிளர்ச்சி காரரைப் பணியவைத்துவிட்டன.

மனம் மாறட்டும்... மாறினால்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும்... என்றொரு 'உண்மையை' அவர்களுக்குள்ளேயே சிலர் பரப்பிய தன் பிரதிபலிப்பாக... அந்த சிறுபான்மை இனத்தவர்களின் போராட்ட வேகம் தணிந்து... பழைய நிலைமை எல்லாம் வந்துவிட்டது. சாதிக் கட்டுப் பாட்டை மீறுவது சண்டாளத்தனம் என்ற பிரபுத்துவ சமுதாயத்தின் கோஷத்தை உபதேசமாகக் கூட சிலர் ஏற்றுக் கொண்டுவிட்டுக்குள்ளே சாதிமையை மறந்து... சம உரிமை இல்லாத இந்த கபேயிலும் சப்பாணி கட்டி சாப்பிட வருவதைப் பார்க்க...... சில சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு நெஞ்சு கொதிக்கத்தான் செய்கிறது...! ஈக்கள் மொய்க்கின்ற கறைபடிந்த மூக்குப் பேணிகளில் தேனீரைக் கொடுத்து சாமான நிலமென்றாலும் கீழே இருத்தி மிருகத்தனமாக நடத்தப்படுவதைப் பார்க்கச் சகிக்காமல் உயர்சாதியிலுள்ள சில இளைஞர்களே இந்த கபேக்கு வருவதில்லை.

இன்று வெள்ளிக்கிழமை... விசேஷ விடுமுறை கூட!

சிவன் கோவில் விரதகாரர்கள் நிறையப் பேர்கள் வருவார்கள் என்பதற்காக பேணிகளெல்லாம் துப்பரவாக மினுக்கப்பட்டு தகதக என்று மின்னுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தேனீர் கொடுக்கும் தகரப் பேணிகளிலுள்ள கறைகள் அப்படியே இருக்க சுக்கான் அங்கே ஆடிப்பாயுள் கொண்டிருக்கின்றன.

இன்று பாடசாலை விடுமுறை என்பதால் கடை முதலாளி கனகுவின் மகன் சிவம்தான் காலையிலிருந்து வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிறான்; தகப்பனுடைய ஜாதிவெறி அவனைப் பற்றிக் கொள்ளாவிட்டாலும் அதையே அனுசரித்து வாழவேண்டிய ஒரு சூழ்நிலைக்கு அவன் தள்ளப்பட்டிருக்கிறான்.

வாசலில் இப்போது சைக்கிள் ஸ்ராண்டில் விடும் சப்தம் கேட்டு காசுலாச்சியில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த சிவம் கொஞ்சம் எட்டிப்பார்க்கிறான்;

கசங்கிய சட்டையுடன்... வியர்வை ஆறாகப் பெருக... தள்ளாடித் தள்ளாடி... கடை வாசல் படியில் கால் வைக்கும் அவனுடைய வகுப்பு ஆசிரியர் வடிவேலுவைப் பார்க்க அவனுக்கு கண் கலங்குகிறது.

பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த அந்த ஆசிரியர் சமீபத்தில்தான் இந்தக் கிராமத்திலுள்ள பாடசாலைக்கு மாற்றலாகி வந்திருக்கிறார். வடிவேலு ஆசிரியரை இன்னும் சிறுபான்மை இனத்தவர் என்று அந்த கிராமத்தில் பலருக்கு அடையாளம் தெரியாது. காரணம் அவர் வேறு கிராமத்தைச் சேர்ந்தவர்.

ஆசிரியர் எந்த ஜாதியாக இருந்தாலும் வகுப்பிலே கொடுக்கும் மதிப்பைத்தான் எங்கும் கொடுக்க வேண்டும் என்று அவனுடைய மனச்சாட்சியே அவனுக்கு அடித்துச் சொல்கிறது;

சமூகத்தின் விளைவை எதிர் நோக்கும் போது அவன் நெஞ்சு நடுங்குகிறது. முன்பு ஒரு முறை இதே கபேயில் சில சிறுபான்மை இளைஞர்கள் பொல்லாலும் இரும்பாலும் பயங்கரமாகத் தாக்கப்பட்டதை நேருக்கு நேர் அவன் பார்த்திருக்கிறான்: பழைய சம்பவத்தை மீண்டும் ஒருதடவை நினைக்க மேனி சிலிர்க்கிறது.

ஓடிப்போய் வாசலை எட்டிப் பார்க்கிறான் திரும்பத் திரும்பப் பார்க்கிறான். கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒருவருமே வரவில்லை. அவன் மனதிலே லேசான மகிழ்ச்சி தோன்ற... சிவன் கோவில் பக்கத்தை எட்டிப் பார்க்கிறான்; பூஜை முடியவில்லை... பூஜை மணி இன்னும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கி

## இவ்வாரச் சிறுகதை

றது: யாரும் இப்போது கடைக்கு வரமாட்டார்கள் என்றொரு நம்பிக்கை அவனுக்கு நல்ல மகிழ்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

'ஸார்... உட்காருங்கோ... டீயா கோப்பியா... என்ன ஸார் வேணும்? வடை சாப்பிடுறீங்களா...?'

உள்ளத்தில் உந்தும் மகிழ்ச்சியில் மூச்சு விடாமல் கேட்கிறான் சிவம்;

'வகுப்பிலே உள்ள பையன்களெல்லாம் நீ போடுற டீயை பிரமாதமா புகழ்ந்தாங்களே... கையோடை பணிசும்... ஒரு வடையும் கொண்டுவாப்பா...' என்று சொல்லிக்கொண்டே... வடிவேலு ஆசிரியர் வாங்கிலே உட்காருகிறார்; ஆனை இறவுக்கு அப்பால் இந்த வடிவேலு ஆசிரியர் பலகாலம் வாழ்ந்தபடியால் எந்த வித கூச்சமுமில்லாமல் உட்கார்ந்துவிட்டார். சிவம் அடிக்கடி தவிப்போடு வாசலை எட்டிப்பார்க்கிறான்.

குழம்பிய அவன் மனதை ஆசிரியராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. கழிந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு விநாடியும் ஏதோ முள்ளின் மேல் நிற்பது போன்ற உணர்வே முழுக்க அவனில் விரவி நிற்கிறது.

ஆசிரியர் டீயின் சுவையில் தன்னை மறந்து விட்டார். வடையின் ருசியில் வாயைச் சப்புக் கொட்டிக் கொண்டு இதமாக பணிசிலும் ஒரு கடி கடிக்கிறார்;

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மனிதன் ஒருவன் வாங்கிலே உட்கார்ந்திருப்பது கடவுளுக்குக்கூடப் பொறுக்கவில்லைப் போலிருக்கிறது!

அந்த நேரம் பார்த்துத்தானா சிவன் கோவில் பூசை முடிய வேண்டும் சிவலிங்கம் ஆசிரியரும் அங்கு வரவேண்டும்...

வடிவேலுவின் சக ஆசிரியரான சிவலிங்கம் சைவப் பழம் என்று வர்ணிக்கப்படுபவர்.

சைவப் பழங்கள்தான் சாதி வெறியின் சின்னங்கள் என்பது இப்போது ஊர் அறிந்த உண்மையாகிவிட்டதே...! தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வடிவேலு ஆசிரியர் வாங்கிலே உட்கார்ந்து அழகான நல்ல பேணியில் தேனீர் குடிப்ப

குரும்பசிட்டி
**மு. திருநாவுக்கரசு**

தைப் பார்த்து அருவருத்துக் கொண்டு தேனீர் குடிக்காமல் சிவலிங்கம் ஆசிரியர் பிரளயம் ஒன்றின் ஆரம்பகர்த்தாவாக வேகமாக கறுவிக்கொண்டு வந்த வழியே திரும்புகிறார்;

"எளிய சோம் சாதிப் பயலே படிச்சசப்போலே... வாத்திவேலை பார்த்தாப்போலே... நல்ல சாதியா வந்திடலாம் என்று நினைச்சியோ...?" கனகு வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டு வடிவேலு ஆசிரியரின் கன்னங்களில் மாறி மாறி அடிக்கிறார்.

கனகு ஆரம்பித்து வைக்க ஆத்திக அடியவர் கூட்டம் சைவ வேதாகம அனுட்டானங்களையெல்லாம் பாழாக்கப் பிறந்த அந்தக் கட்டம் தன்னந்தனியாக தடுமாறி நிற்கும் அந்த ஏழை ஆசிரியரை நையப்புடைத்துக் கொண்டிருக்கிறது. வடிவேலு ஆசிரியரின் சேட் கிழிக்கப்பட்டு... மண்டை உடைக்கப்பட்டு மயக்க முற்ற நிலையில் வீதி ஓரத்தில் அடித்துத் தள்ளப்படுகிறார்;

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் ஒரு ஆசிரியராக வருவதா...? வரலாமா...? என்றொரு ஆத்திரம் வேறு அங்கு நின்றவர்களை உசுப்பிக்கொண்டிருக்கிறது. கனகுவின் ஆத்திரம்... ஆவேசம்... சிவம் பக்கம் திரும்ப மகன் மேல் சீறிப் பாய்கிறார்...

"டேய்...உன்னுடைய வியாபாரமே கெட்டுப் போச்சுடா..." என்று சொல்லிக் கொண்டே துவரம் கம்பால் மிருகத்தனமாகத் தாக்குகிறார்.

அவன் விம்மி விம்மி அழுகிறான்.

முதுகிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது; அந்த இரத்தத்துக்கு நிச்சயம் ஒரு மதிப்பு இருக்கத்தான் செய்கிறது. நசுக்கப்பட்ட வர்க்கத்துக்காக வடிக்கப்பட்ட இரத்தமல்லவா அது...

அவன் அழுகை இன்னும் ஓயவில்லை.

கனகுவின் பார்வை வடிவேலு ஆசிரியர் குடித்து விட்டு வைத்த பேணியில் பதிகிறது.

அடக்க முடியாத கோவத்தில் கனகு அந்த அழகான நல்ல பேணியை எடுத்து கறைபடிந்த மூக்குப் பேணி [illegible] இப்போது ஒரு புதுப் பெயர் வந்து விட்டது அதுதான் வெளிப்பேணி! பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வடிவேலு ஆசிரியரின் கைபட்ட குற்றத்திற்காக அந்தப் பேணியும் ஒதுக்கப்பட்டுவிட்டது; ஆனால்...

அந்த தாழ்த்தப்பட்ட ஆசிரியர் மேசை மீது வைத்த ஒரு ஐம்பது சதக் குற்றியை ஒதுக்க முடியாமல் அவசரம் அவசரமாக லாச்சிக்குள் எடுத்துப்போடுகிறார் கனகு! கண்ணீரால் இரத்தத்தைக் கழுவிக்கொண்டு நிற்கும் மகனைப் பார்க்க நேரமில்லாமல் காசிலே கவனத்தைச் செலுத்துகிறார் கனகு!

சிவம் விம்மி விம்மி அழுகிறான். அவன் அழுகை ஓயப் போவதில்லை... தகப்பனிடம் நேரே வருகிறான்; உள்ளத்திலே அவனுக்கொரு தெளிவு பிறந்துவிட்டது; கண்ணுக்கு நேரே கண்ட அக்கிரமம் அவனுடைய நெஞ்சிலே ஒரு துணிவை வரவழைத்து விட்டது; "என்னப்பா... அநியாயம்...வடிவேலு மாஸ்டர்... பேணியிலை தொட்டது குற்றமென்றால்... அவர் குடுத்த காசை மட்டும் ஏனப்பா லாச்சிக்குள்ளை போடுறியள்? அந்தப்பணத்தையும் காறி உமிழ்ந்து... விசிறிவிடுறதானே...?"

சிவத்தின் கேள்வி கனகுவின் நெஞ்சைத் துளைத்தது; பகுத்தறிவு வாதிகள் ஆத்திக அடியவர்களைப் பார்த்து கேட்க வேண்டிய அவசரமான அவசியமான கேள்வியைத்தான் அவனும் தகப்பனைப்பார்த்துக் கேட்டிருக்கிறான்.

இந்தக் கேள்விக்குரிய பதில் கனகுவுக்குத் தெரியும், வாய்திறந்து சொல்ல முடியாது. சொன்னால் கௌரவம் குறைந்து விடும்.

"என்ன செய்வது...மனுஷனுக்கு தேவை என்று வந்து விட்டால் ஜாதி ஒதுங்கி விடுகிறது. மனிதனுக்கு தேவைப் பட்டதில் ஜாதி பார்க்க முடியுமா? இந்த மனுஷன் மண்ணிலும் பெண்ணிலும் பொன்னிலும் ஜாதி பார்க்கவே மாட்டான்...! எவ்வளவு நல்ல மனுஷன்!" சிவம் பேசிக்கொண்டிருக்க கனகு கோபத்துடன் சிவத்தைப் பார்க்கிறார். அவன் கன்னங்களில் கண்ணீர் வழிந்த அறிகுறிகள் இப்போது லேசாகத் தென்படுகின்றன. வெளியே எட்டிப் பார்க்கிறான். வடிவேலு ஆசிரியர் மயக்கம் தெளிந்து எழும்பி... நொண்டி...நொண்டி சைக்கிளையும் தள்ளிக்கொண்டு போகிறார்; சாலையின் திருப்பம் அவரை முழுதாக விழுங்கி விட்டது; அவன் கண்களில் மீண்டும் சரத்துளிகள் அவனை அறியாமலே வந்து விட்டன. தர்மம், நீதி சாகடிக்கப்படுவதை நினைக்க அந்த பிஞ்சு உள்ளம் வெடித்து சிதறுகிறது. வேடிக்கை பார்த்த கூட்டம் கலைகிறது; அன்றைய தினசரியை புரட்டுகிறான்; கண்ணீர் திரை போட்ட விழிகளால் அவன் குறிப்பிட்ட ஒரு பகுதியை பார்க்கிறான்: 'சாதிப்பாகுபாடு காட்டும் தேனீர் கடைகளின் லைசென்ஸ் நீக்கப்படும்—' என்ற கொட்டை எழுத்துக்களிலிருந்த தலையங்கத்தை வெகு உன்னிப்பாகப் படிக்கிறான். மேற்கொண்டு அவனால் ஒரு வரி கூட படிக்க முடியவில்லை. ஆனந்தக் கண்ணீர் பத்திரிகையின் எழுத்துக்களையே அழித்துவிட்டது.

அவன் சிந்திய கண்ணீர்... இரத்தம்...மீண்டும் அவனுடைய உடலிலே புகுந்து அவனுக்கு பழைய பெலத்தைக் கொடுப்பது போன்ற புத்துணர்வு கிடைக்கிறது: ஏதோ ஒரு வெறி அவனிலே எழுந்து நிற்கிறது. அது மிக மிக வேகமாக அவன் நெஞ்சிலே பரவுகிறது; பத்திரிகையை மடிக்கிறான்... வெளியே வருகிறான்; வடிவேலு வாத்தியாரின் திசை நோக்கி மாஸ்டர்...மாஸ்டர்...என்று கூவிக்கொண்டே ஓடுகிறான்.

வடிவேலு வாத்தியாரிடம் அன்றைய தினசரியில் அவன் படித்த தலையங்கத்தை வாசித்துக் காட்டியபோது தான் அவன் நிம்மதியாக மூச்சு விட்டான்...! அவனுடைய உள்ளம் கூட இப்போதுதான் உண்மையாகச் சிரிக்கிறது...! வடிவேலு ஆசிரியரின் கண்ணீர்த்துளிகள் தழும்புகளில் விழுந்து அவனுடைய வேதனையை மறக்கச்செய்துகொண்டிருக்கின்றன...! இருவருடைய கண்ணீர்த்துளிகளும் சங்கமமாகி மனிதன் பொதுவானவன் என்ற உண்மையை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்ற காட்சியை இருவருமே வெகுவாக ரசித்துக் கொண்டு நிற்கிறார்கள்!

## இதற்கு இங்கே இடமில்லை!

—சோமலிங்கம்—

சோறு பெரிதென எண்ணிடுவார்...சும்மா
சுதந்திரம் பற்றிப் பேசிடுவார்
வீறு கொண்ட தமிழ் இளைஞர்—இன
வெறியர் என்று தூற்றிடுவார்;

சுத்தியும் சுத்தியும் தம்முடைய—இரு
கண்கள் கண்ட கடவுளென்பார்
சுத்தியும் சுத்தியும் பிடிப்போரை—ஒரு
கடைகெட்ட பிறப்பு என நினைப்பார்!

அடக்கப்பட்ட மக்களுக்கு—தான்
ஆதரவென்று கூறிடுவார்
வடக்கில் ஒன்று உரைத்திடுவார்—தெற்கு
மாவட்டம் தன்னில் அதை மறுப்பார்;

தேசியம் பேசித்திரிந்திடுவார்—இங்கு
சிறுபான்மை மக்கள் அழிவதற்கு
ஜோசியம் பார்த்து அலைந்திடுவார்—ஒரு
யோசனை இன்றிக்கலைந்திடுவார்

உயர்வு தாழ்வு ஒழி என்பார்—தாம்
உறவும் பகையும் இல்லை என்பார்
துயரும் சோர்வும் தொலை என்பார்—பெரும்
துரைமாருக்கு அடிபணிவார்.

பாரதி பாடல் பாடிடுவார்—அந்த
பாவலன் நெஞ்சம்தான் அறியார்
காரணமின்றிக் கருத்தரங்கில்—உயர்
"கான்மாக்ஸ்" கொள்கை விளக்கிடுவார்;

சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடு—இந்த
தோழர்கள் தமக்கே உடன்பாடு
எல்லாச் செயலும் வெளிவேசம்—இனி
இதற்கு இங்கே இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலும் கிழக்கிலும் பொருளாதாரம் இல்லையாம்!

## பீக்கிங் தோழர்களின் பிதற்றல்!

இலங்கையில் உள்ள சீன கம்யூனிஸ்டுகள் இப்போது துள்ளிக்குதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்; வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் தமிழர்கள் தனி வாழ்வு காணமுடியாதாம். அங்கு இருப்பது 'போஸ்டல் ஓடர்' பொருளாதாரமாம். அங்கே பொருள் வளம் இல்லையாம்;

தோழர்களே! தோழர்களே! இலங்கையான இலங்கையில் மட்டும் பொருளாதாரம் உண்டா? பொருளாதாரம் இல்லாமல் ஒரு நாடு தனித்து வாழமுடியாதா? இலங்கை அரசாங்கம் தன்னுடைய நாட்டில் பொருளாதாரம் இல்லாமல் தானே அமெரிக்காவின் மக்னமாராவை அழைத்து கடன் வாங்குகிறது. சிறை வசி கெஞ்சி பிரான்சிடமும் வாங்கிறது. ரஷ்யாவின் காலைப் பிடித்து மிக் விமானம் பெறுகிறது; வடக்கு கிழக்கு மாகாண தமிழர் தனிவாழ்வு காண விரும்பினால் மட்டும் அங்கே என்ன பொருளாதாரம் உண்டா? என்று கேட்கிறீர்கள்.

இலங்கையில் வாழும் சீனாவின் வால்களே! வியட்நாமில் ஆயிரக்கணக்கான தொழிலாளவர்க்கத்தினரை கொன்று பிணமாக்கிய அமெரிக்காவின் உயிர் நண்பர்களே! உங்களுக்கு சோசலிசத்தைப் பற்றி என்ன தெரியும்? கம்யூனிசத்தைப் பற்றி என்ன தெரியும்? பொருளாதாரத்தைப் பற்றி என்ன தெரியும்!

"வங்காளத்தில் இந்திய விஸ்தரிப்பு ஏற்பட்டதை வைத்துக்கொண்டு ஈழத்திலும் தமிழரசுக்கட்சி துள்ளுகிறது" என்று இலங்கை சீன கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை விட்டிருக்கிறது.

தோழர்களே! புதுப்புதுச் சொற்களை அவ்வப்போது பிடித்துவிட்டு நீங்கள் கூத்தாடுகிறீர்கள்; என்ன இந்திய விஸ்தரிப்பு?

வங்காள கிழக்குப் பாகிஸ்தானாய் இருந்த நேரத்தில் வங்காள மக்களை விடுவிப்பதற்காக இந்தியப் படைகள் வங்காளத்தினுள் நுழைந்த போது வங்காளத்தில் இருந்த சீன கம்யூனிஸ்டுகளான வங்காளிகள் இந்தியத் துருப்புக்களோடு சேர்ந்து பாகிஸ்தானிய துருப்புக்களை எதிர்த்துப் போராடினார்கள்; இங்கே நீங்களோ "வங்காளத்தில் இந்திய விஸ்தரிப்பு" என்று கொக்கரிக்கிறீர்கள்.

இலங்கையிலுள்ள சீன வால்களே! என்ன காணும் உங்கள் கொள்கை!

இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் என்ன பொருளாதாரம் உண்டு என்று கேட்கிறீர்கள்? இலங்கையின் மொத்த மக்களை பராமரிக்க இலங்கையில் உள்ள மொத்தப் பொருளாதாரம் எந்த அளவு ஈடுகொடுக்குமோ அந்த அளவு இலங்கையிலுள்ள மொத்தத் தமிழர்களையும் பராமரிக்க வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பொருளாதாரமும் தாராளமாய் ஈடுகொடுக்கும். இதை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். வேண்டுமானால் கேளுங்கள் விபரமாக உங்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரம் பற்றி ஒரு பாடமே நடத்திவைக்கிறோம்!

ஒருவகையில் நாங்கள் சீன கம்யூனிஸ்டுகளை பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம் 'தமிழருக்கு பிரதேச சுயாட்சி' கொடுக்க வேண்டும் என்று அவர்கள் 1-3-72 தினகரன் இதழில் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். அப்பாடா? 'சமஷ்டி என்பது வகுப்புவாதம்' என்று நேற்றுவரை கூறி வந்த சீன கம்யூனிஸ்டுகள் இப்போது 'தமிழருக்கு ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட ஒரு பிரதேச சுயாட்சி வேண்டும்' என்று கூறினார்களே! இவர்கள் ஞானோதயம் வாழ்க!

## முஜிபுர்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம்புரளிகளைச் செய்திருக்கிறது லேக்ஹவுஸ்!

'லேக்ஹவுஸ் கொலைக்காரர்களின் கூடாரம்' என்று தேர்தலுக்கு முன்புசொன்ன சூரியரையும் பதியுதீனையும் தனது 'தினகரனின்' கையாட்களாக்கி அவர்களையும் தங்கள் கொலைக் கூட்டத்தோடு கூட்டமாய் கலந்திடச்செய்த பெரிய கெட்டித்தனத்தை, லேக்ஹவுசைவிட யாரால் செய்யமுடியும்?

இலங்கையில் புதிதாக எழுந்துள்ள தமிழ் உணர்ச்சியை—விடுதலைத் தாகத்தை—மட்டம் தட்டுவதற்காக இப்போது இப்படியான சூழ்ச்சிகளில் அரசாங்கமும் அரசாங்கத்தின் கையாட்களான 'லேக்ஹவுஸ்' 'குணசேன கம்பெனி' முதலிய நிறுவனத்தினரும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள்; என்னதான் புரட்டுக்களை இவர்கள் அவிழ்த்துவிட்டாலும் இலங்கைத் தமிழினத்துக்கு உண்மை இப்போது நன்றாகத் தெரியும்.

'பங்களாதேஷ்' போராட்டத்துக்கு தமிழரசுக் கட்சிதான் இலங்கையில் அதிகதூரம் ஆதரவு கொடுத்தது என்பதும் — அந்த நன்றிக்கு கைம்மாறு செய்ய 'பங்களாதேஷ்' எந்தச் சந்தர்ப்பத்திலும் பின் நிற்காது என்பதும் தமிழ் மக்களுக்கு தெரியாதா? என்ன?

## முத்திரை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குக்கு ஏதோ பெரிய சேவை செய்துவிட்டதாகச் சிலர் நினைக்கிறார்கள்; அதற்காக அமைச்சர் குமாரசூரியரையும் அவர்கள் தலைகால் புரியாமல் பாராட்டவும் செய்கிறார்கள்.

ஆனால் 'நாவலர்' ஆனந்த குமாரசுவாமிக்கு மட்டுமா முத்திரைகள் வெளியிடப் பட்டிருக்கின்றன? தேவாரங்கு, காட்டெருமை, சிறுத்தை, நாகணவாய்களுக்குக் கூடத்தான் முத்திரைகள் வந்திருக்கின்றனவே!' என்றோ 'நாவலருக்கு ஐந்து சத முத்திரையும் தேவாங்குக்கு பதினைந்து சத முத்திரையும் வெளியிட்டதன்மூலம் நாவலரைவிடத் தேவாங்கை இந்த அரசு உயர்வாகக் கருதுகிறதா?' என்றோ நாம் கேட்டால் 'விட்டுத்தள்ளுங்கள்; அவர்கள் தமிழரசுக் காரர்கள்' என்பார்கள்.

ஆம், தமிழரசுக் கட்சிக் காரர்களை விட்டுத் தள்ளுங்கள். சென்ற மாதம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அன்னை விழா வொன்று நடந்ததல்லவா? அதிலே பெரிய பிரபல எழுத்தாளரும் பேச்சாளருமான ஓர் ஆசிரியர் பேசியதைக் கவனியுங்கள். அவர் முத்திரைகள், முதல்நாள் உறைகளைச் சேகரிப்பதை ஒரு கலையாகக்கொண்டவராதலால் அவரது கருத்துக்கள் சிந்தனைக்குரியன:-

'எமது அமைச்சர்கள் தேசிய ஒருமைப்பாடு பற்றி அடிக்கடி பேசுகிறார்கள்; சுதந்திரத்துக்காகப் போராடிய முதல் தமிழ் மகன் நாவலர்தான் என்கிறார்கள்; ஆனால் நாவலர் ஆனந்த குமாரசுவாமி முத்திரை வெளியீடுகளைக் கவனித்தால், அவர்கள் பேசுவதெல்லாம் வெறும் வாய் வேதாந்தம் என்பது புரிகிறது.

'மேற்படி இரு தலைவர்களையும் இவர்கள் இலங்கை முழுவதற்கும் உரியவர்களாக உண்மையில் கருதியிருந்தால் ஐந்து முத்திரைகளை ஒரே நாளில் வெளியிட்டிருக்க வேண்டியதில்லை; நாவலரை நல்லூருக்கும் ஆனந்தகுமாரசுவாமியை மானிப்பாய்க்கும் மட்டும் உரியவர்களாக்கி- அவர்களை வட மாகாணத்துடன் ஒதுக்கியிருக்கவேண்டியதில்லை;

'ஒரு நாட்டில் ஒரு முத்திரை வெளியிடுவதாக இருந்தால், அந்த முத்திரை அந்த நாட்டிலுள்ள எல்லா தபால் நிலையங்களிலும் அன்று விற்பனைக்குக் கிடைக்கவேண்டும்—இது நாவலர் ஆனந்த குமாரசுவாமி முத்திரை விவகாரத்தில் நடக்கவில்லை.

'அடுத்து, வெளியிடப்பெறும் முத்திரை தொடர்ந்து சில மாதங்களுக்காவது அல்லது ஒரு மாதமேனும் தபால் நிலையங்களில் விற்பனைக்குக் கிடைக்கவேண்டும்—இதுவும் நாவலர் ஆனந்தகுமாரசுவாமி முத்திரைகளைப் பொறுத்தவரை நடக்கவில்லை."

இதுவே அவரது பேச்சின் விவரமாகும்!

வியாபாரத்திற்கழகு

விளம்பரம்

செய்தல்

# கல்வி அமைச்சரின் கண் திறக்குமா?

சட்டம் வகுக்கப்படும் பொழுது சட்டத்தின் ஓரத்தில் உள்ளவர்களுக்கு சற்றுக்கூடிய சலுகைக்கு இடமளிக்கப்படும். இது நியாயமானது;

55 வயதில் அரசாங்க ஊழியருக்கு ஓய்வு என்ற சட்டம் 1970ல் உருவாகியபொழுது 31-12-70 உடன் 58ம் அதற்குமேலும் வயதுடைய அனைவரும் வெளியேறவேண்டுமென்றும், அவ்வமயம் 57 வயதுக்கு சேவை நீடிக்கப் பட்டவர்கள் அவ்வயது முடியும் வரை சேவை செய்யவும் அதே வேளையில் 1970 மார்கழி 31ல் 55 வயது முடிவடைந்தவர்கள் ஒரு வருட சேவை நீடிப்பு பெறுவர், என்றும் சட்டம் கூறியது; 1971ல் வெளிவந்த அறிக்கைப்படி 1970ல் 55 வயது பூர்த்தியடைந்து ஒருவருட சேவை நீடிப்பு பெற்றவர்கள் உட்பட 1971 மார்கழி 31க்குள் 55 வயது பூர்த்தி அடைபவர்களும் 31-12-71ல் ஓய்வு பெற்றுவிட வேண்டுமென்றும், அதற்கு மேல் ஒருவருக்கும் சேவை நீடிப்பு இல்லை என்றும் செய்தி வெளியாகியது.

55 வயதில் கட்டாய ஓய்வு என்ற சட்டம் உருப்பெற்ற நாள் முதற்கொண்டு 31-12-72 வரை கொடுக்கப்பட்டு வந்த சலுகைகளைக் கூர்ந்து கவனிக்கும் பொழுது, சட்டத்தின் ஓரத்தில் இருந்தவர்களுக்குக் கூடிய சலுகையும் ஏனையவர்களுக்கு படிக்கிரமமான சலுகைக் குறைப்பும் இடம் பெற்றிருப்பதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. இந்த ரீதியில் 70 மார்கழி 31ல வெளியேறியவர்கள் 55 வயதிற்கு மேல் 3, 4, 5 வருடங்கள் சேவை செய்தவர்களாகவும், 71 ஜனவரி முதல் வெளியேறியவர் 55 வயதிற்கு மேல் இரண்டு வருடங்கள் சேவை செய்தும் 57 வயது முடிவுத் திகதியில் வெளியேறியவர்களாகவும், 71 மார்கழி 31ல் ஒரு பகுதியினர் 70 மார்கழி 31ல் 55 வயது முடிந்து சேவை நீடிப்பு பெற்று 55 வயதிற்கு மேல் இரண்டு வருடம் ஒரு வருடம் 11 மாதம் — ஒரு வருடம் 10 மாதம் — ஒரு வருடம் 9 மாதம் என்றும் இப்படியான சலுகைக் குறைப்பு பெற்றவர்களாகவும் இருக்க, மறு பகுதியினர் 71 மார்கழி 31க்குள் 55 வயது முடிந்து 11-10-9-8-7 என்று படிக்கிரமமாக ஒவ்வொரு மாதச் சலுகைக் குறைப்புகளுக்கு உட்பட்டும் அதே வருடம் மார்கழியில் 55 வயது பூர்த்தியானவர்கள் எவ்வித சலுகையும் இன்றி அம் மாதத்தோடு வெளியேறியவர்களாகவும் இருக்கின்றனர். ஆரம்பத்தில் காட்டியிருந்தபடி 71 மார்கழி 31க்கு மேல் சேவை நீடிப்பு இல்லையென்று இருந்தால் எவ்வித பேச்சுக்களும் வாதாட்டத்திற்கும் இடமிருந்திருக்காது. சட்டம் உருவாகிய நாள் முதற்கொண்டு சட்டம் ஓரத்தில் உள்ளவர்களுக்குக் கூடிய சலுகையும் ஏனையவர்களுக்கு படிக்கிரமமான குறைந்த சலுகைகளையும் வழங்கி வந்திருக்கிறது;

1972ல் பத்திரிகைகளில் வெளிவந்த அறிக்கைகளின் படி மீண்டும் 1-1-72க்குள் 55 வயது பூர்த்தியாகுபவர்களுக்கு 31-12-72 வரையும் 1-7-72 — 31-12-72க்குள் 55 வயது முடிவடைபவர்களுக்கு 30-6-73 வரையும் சலுகை உண்டென்றும், இச்சலுகை அடுத்து வரும் சில வருடங்களுக்கும் நடைமுறையில் இருக்கும் என்றும் செய்தி வெளிவந்துள்ளது. இங்கேதான் சட்டம் [illegible] பழுகின்றது: சட்டம் ஓரத்தில் உள்ளவர்களைத் தண்டித்தும், தூரத்தில் இருப்பவர்களுக்கு அதிக சலுகை அளித்தும் சட்டம் செல்லுகின்றது. 31-12-71ல் 55 வயது முடிவடைந்தவர்கள் ஒருவித சலுகையும் இன்றி வெளியேற 1-1-72, 1-1-73ல் 55 வயது முடிவடைபவர்களுக்கு ஒரு வருட சலுகை அளிக்கின்றது சட்டம்.

அன்றியும் 1-7-72 — 31-12-72க்குள் 55 வயது முடிபவர்களுக்கு 30-6-73 வரை சலுகை என்றால் அச்சலுகை 1-7-71 — 31-12-71க்குள் 55 வயது முடிந்தவர்களுக்கும் ஏன் கொடுபடக்கூடாது? இக்கால எல்லையுள் வெளியேறியவர்களைப் பற்றி பத்திரிகைகளிலும் எவ்வித அறிக்கைகளும் வெளியாகவில்லை.

கல்வி அமைச்சு வழங்கும் இவ்வித சலுகைகளும் அனைவருக்கும் சமநீதி அளிப்பதாகவும் இல்லை. 1-1-71ன் பின் 55 வயது முடிவுற்ற அனைவரும் அடுத்த பிறப்புத் திகதியுள் வெளியேற வேண்டுமென்ற சட்டம் கூறுமாய் இருந்தால் ஒவ்வொருவரும் 55 வயதிற்கு மேல் ஒரு வருடச் சலுகை பெற்று ஓய்வு பெறுவர். இது அனைவருக்கும் சம நீதி வழங்கியதாக இருக்கும்.

இன்னும் 1-1-71 — 31-12-71க்குள் 55 வயது முடிந்து வெளியேறிய ஆசிரியர்களைப் பற்றி குறிப்பிடும் போது இவர்களில் பெரும்பாலோர் 3 வருடப் பயிற்சி பெற்றவர்கள். மாணவரில் இருந்து பயிற்சிக்குத் தெரிவு [illegible] வெளியேறியவர்கள் தொழில் கல்வி உட்பட சகல பாடங்களையும் கற்பிக்கும் வகையில் பயிற்சி பெற்றவர்கள். பயிற்சி முடித்து வெளிப்பட்டும் பல வருடங்கள் வேலைவாய்ப்பு இன்றி இருந்தவர்கள் குறைந்த பட்ச சம்பள விகிதத்தில் கடமைக்கு அமர்த்தப்பட்டவர்கள் அவ்வமயம் பயிற்சி முடித்து வெளியேறிய இரண்டாம் தராதரப் பத்திர ஆசிரியரின் மாதச் சம்பளம் ரூபா 43.00 மட்டுமே

எனவே 72ல் 55 வயது பூர்த்தியாகும் ஆசிரியர்களை விட சட்டத்தின் ஓரத்தில் இருந்தவர்கள் என்ற காரணத்தினால் 71ல் 55 வயது பூர்த்தியானவர்களுக்கு சற்றுக் கூடிய சலுகை கிடைக்கவேண்டும். 70ல் பூர்த்தியானவர்களுக்கு அதைவிடக் கூடிய சலுகை கிடைக்கின்றது. ஆகையால் இவையாவற்றையும் பரிசீலனை பண்ணி 1-1-71ன் பின் 55 வயது பூர்த்தியான சகலர்க்கும் ஒரு வருடச் சலுகை கொடுத்து அவர்கள் அனைவரும் தத்தம் அடுத்த பிறப்புத் தினத்தில் இருந்து ஓய்வு பெற வழிவகுத்து யாவருக்கும் சம நீதி கிடைக்க வாய்ப்பளிக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன். "சட்டம் ஒரு இருட்டறை வக்கீல் ஒரு விளக்கு. இந்த விளக்கு ஏழை மக்களுக்கு எட்டுவதில்லை" (அறிஞர் அண்ணா)

தயவு செய்து சகல ஆசிரிய சங்கங்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரலெடுத்து அனைவருக்கும் சம நீதி கிடைக்க உதவும்படி வேண்டுகிறேன்.

இங்ஙனம்

வ. நிக்கொலாஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கற்பனை:

# சாயிபாபாவும் தினபதியாரும்

(பகவான் சாயிபாபா புட்டப்பர்த்தியில் இருந்து அவசர அவசரமாகப் புறப்பட்டு ஈழம் வருகிறார். அனைத்தும் வல்ல அவதார புருடரான பகவான், ஈழத்துக்கு யார் கண்ணிலும் படாமல் எழுந்தருளி நேரே தினபதி பத்திரிகாலயத்துள் நுழைந்து கோபக் கண்களோடு அங்கே வீற்றிருக்கும் தினபதியாரைப் பார்க்கிறார்.)

பகவான்: தினபதியாரே...

தினபதியார்: (பதைத்து எழுந்து நிற்கிறார்) சுவாமி தாங்கள் இலங்கைக்கு வர இருப்பதாக முன்பு சொல்லப்பட்டது தெரிந்ததே!

பகவான்: நிறுத்து உமையா உனது பத்திரிகைத் தமிழை! தெரிந்ததே... மண்ணாங்கட்டி!

தினபதியார்: ஏன் சுவாமி சினக்கிறீர்கள்?

பகவான்: தெய்வம் உன்னைப் பார்த்துச் சினக்காமல் வேறு யாரைப் பார்த்துச் சினப்பது?

தினபதியார்: அப்படியா? என்னோடு கோபித்தவர்கள் யாரும் உருப்பட்டதில்லை — மன்னிக்கவும் சுவாமி. வழக்கத்தில் மற்றவர்களோடு பேசுவது போல் உங்களிடமும் பேசிவிட்டேன்— நீங்கள் பகவான்—நான் சாயிபக்தன்!

பகவான்: பக்தனு? இன்னொரு முறை சொல்லாதே! உன்னைப்போல் சிலரால்தான் இலங்கையில் என் பேருக்கே இழுக்கு! தெய்வத்தையும் மதத்தையும் வியாபாரத்துக்காக பயன்படுத்தும் அற்பன் நீ.

தினபதியார்: அப்படி இல்லையே சுவாமி!

பகவான்: ஏன் இல்லை? இவரா திகதியிலா? அந்தத் திகதியிலா? என்று உதவாத மோதலை ஏற்படுத்தி அதனால் பத்திரிகை விற்பனையை ஓட்டப்பார்க்கும் அயோக்கியன் தானே நீ! மாவிட்டபுரத்துக் குருக்களைப் பிடித்து இலங்கை வாழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான அறிக்கைகளை தினபதியில் வெளியிட்டு ஆலயப்பிரவேசத்துக்கு எதிர்ப்பாக இருந்த அசல் பாவி தானே நீ!

தினபதியார்: அதெல்லாம் பத்திரிகைத் தந்திரங்கள் சுவாமி!

பகவான்: ஆம்... உனக்கு வீட்டிலே பகவானின் மந்திரங்கள் - பத்திரிகை அலுவலகத்தில் பஞ்சமா பாதகத் தந்திரங்கள்!

தினபதியார்: சுவாமி நான் ஒருமுறை புட்டப்பர்த்திக்கு வந்து உங்களைச் சந்தித்தவன் — என்னை ஏன் இப்படித் தாக்குகிறீர்கள்.

பகவான்: ஹஹ்ஹஹ்ஹா... தினபதியாரே நீ புட்டப்பர்த்திக்கு வந்ததும்— என்னைத் தரிசித்ததும் உண்மை—உனக்கு ஆதாயம் தரக்கூடியவர்கள் யார் இந்த உலகத்தில் இருந்தாலும் அவர்களை ஓடிப்போய் சந்திக்கிறவன்தானே நீ — குமாரசூரியரையும் சந்திப்பாய் —பதியுதீனையும் சந்திப்பாய் — அப்படித்தான் என்னையும் சந்தித்தாய்! ஹஹ்ஹஹ்ஹா! என்னை நீ ஏமாற்ற முடியாது!

தினபதியார்: சுவாமி நான் புட்டப்பர்த்தியில் இருந்து உங்கள் விபூதி கொண்டுவந்து இங்கு அன்றாடம் என் நெற்றியில் பூசி வருகிறேன்...

பகவான்: நெற்றியில் திருநீறு! நெஞ்சில் அழுக்காறு! நீ என்ன பக்தன்!

தினபதியார்: நான் அப்படி ஒரு பாவமும் செய்வதில்லையே சுவாமி!

பகவான்: பாவம் செய்வதில்லையா? சொல்கிறேன் கேள்!

இலங்கையில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப் பிரவேசம் நடத்திய போது ஆண்டவனாகிய நான் அவர்கள் பக்கம் இருந்தேன். நீயோ குருக்கள் பக்கம் இருந்தாய் — தாழ்த்தப்பட்டவர் பக்கம் இல்லாமல் தாழ்த்தியவர் பக்கம் இருந்தாய்! குணசேனா கம்பெனியில் வேலை நிறுத்தம் வந்தபோது நீ முதலாளிகளோடு ஒத்துழைத்து அங்கு வேலை செய்த பல தொழிலாளருக்கு வேலை இல்லாமல் போகச் செய்தாய்! நசுக்கப்பட்டவர்கள் பக்கம் இல்லாமல் நசுக்கியவர்கள் பக்கம் இருந்தாய்.

(தணிக்கை)

தினபதியாரே! உலகில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நீ அசுரர்கள் பக்கமே இருந்தாய்— இருந்து வருகிறாய் — நீ செய்யும் பாவங்கள் கொஞ்சமா?

தினபதியார்: சுவாமி பாவங்கள் எவை என்று இதுவரை எனக்குத் தெரியாது தெய்வமே! "பாவங்கள்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதித் தந்துவிட்டுப் போங்கள் நான் அதை தினபதியில் வெளியிடுகிறேன்.

பகவான்: ஏன் நான் எழுதித்தரும் கட்டுரையைப் போட்டு தினபதியில் நீ காசு வவுச்சர் எடுக்கவா? எத்தனை பேரின் காசை இப்படிச் சுருட்டி இருக்கிறாய் என்பதை நான் அறிவேன். பாவம் எழுத்தாளர்கள்!

தினபதியார்: அப்படி எழுத்தாளர்களுக்கு நான் ஒரு தீங்கும் செய்யவில்லையே தெய்வமே...

பகவான்: பேசாதே! இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு அறிஞர் வ. ராவின் எழுத்தைத் திருடி 'பர்வதஜோதி' நாடகம் எழுதிய நீயா எழுத்தாளருக்குப் பாவம் செய்யாதவன்?

தினபதியார்: சுவாமி... என்னைத் தாக்காதீர்கள் ...நான் எனக்கென ஒரு கொள்கையோடு வாழ்ந்து வருகிறவன்.

பகவான்: தினபதியாரே! உன் கொள்கையை நான் அறிவேன். பழனி என்ற யாழ்ப்பாணத்து இளைஞன் சத்தியாக்கிரக வேளையில் சிறீகாந்தாவின் ஜீப் வண்டியின் கீழே போய்ப் படுக்கும் அளவுக்கு சுதந்திரனில் தமிழ் எழுதி தூண்டிவிட்டவன் நீ... பின்பு அந்தப் பழனிக்கு மேல் ஜீப் விட்ட சிறீகாந்தாவைப் பாராட்டி தினபதியில்—தமிழாராச்சி மாநாடு கட்டுரை எழுதியவனும் நீ. செல்வாவை ஈழத்தின் நிகரற்ற தமிழ்த் தலைவர் என்று சுதந்திரனில் எழுதியவன் நீ பின்பு அதே செல்வாவை 'சூரன்' என்று தினபதியில் இன்டல் செய்தவன் நீ! 'தமிழன் கனவு' கவிதை நூல் முன்னுரையில் கவிஞர் காசி ஆனந்தனை 'உதய சூரியன்' என வருணித்தவன் நீ. பின்பு தினபதி அத்தாணி மண்டபத்தில் அதே காசி ஆனந்தனை 'புணர்ச்சிக் கவிஞர்' என்று தாக்கியவன் நீ உனக்கு என்ன கொள்கை!

தினபதியார்: உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது!

பகவான்: இல்லை; எல்லாம் தெரியாது — எனக்கு பாவம் செய்யத் தெரியாது —உனக்குத்தான் எல்லாம் தெரிந்திருக்கிறது! பாவம் உட்பட!

தினபதியார்: நான் கள்ளம் அற்றவன் சுவாமி.

பகவான்: கள்ளமாக — நீ 'பரியாரி' பட்டம் வாங்கிய கதையைக் கூடவா மறைக்கப் பார்க்கிறாய்? தினபதியாரே! கள்ளம் தெரியாதாம் தினபதியாருக்கு! இந்த உலகத்தில் ஒரு கமிரா களவு போன கதை உட்பட பல கதைகள் எனக்குத் தெரியும் தினபதியாரே!

தினபதியார்: ஓம் சத்திய சாயி!

பகவான்: சொல்லாதே! அதற்கும் ஒரு பக்குவம் வேண்டும்!

(பகவான் திடீரென்று மறைந்தருளுகிறார். தினபதியார் மேசையில் உட்கார்ந்து அவசரமாக ஏதோ எழுதத் தொடங்குகிறார். பகவான் வந்ததையும் போனதையும் பற்றிக் கூட அவருக்குக் கவலையில்லை — தினபதியார் அப்படி அவசரமாக என்ன எழுதுகிறார் என்று கேட்கிறீர்களா? சொல்லின் செல்வர் இராசதுரையை படுகுழியில் தள்ளிவிடுவதற்கான ஒரு கற்பனைச் செய்திதான் அது! இதுவரை செய்த பாவங்களோடு சேர்த்து அவர் செய்யத் துடிக்கும் இன்னொரு பாவம்—மட்டக்களப்பான் யாழ்ப்பாணத்தான் பிரச்சினை.)

## சிங்கள மக்களின் நல்லபெயருக்கு இழுக்கு புதிய அரசியல் சட்டம்!

—சாலை இளந்திரையன்—

சிங்கள மக்கள் மிகவும் நல்லவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்; பொதுவாகச், சிங்கள மக்கள் சூதுவாது தெரியாதவர்கள் என்றும் பலர் சொல்லியுள்ளார்கள். ஆனால், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த சிங்களத் தலைவர்களின் அரசு தயாரித்துள்ள அரசியல் அமைப்பைப்பார்க்கின்றபோது, 'சிங்கள மக்களைப் பற்றி நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மை இல்லையோ?' என்னும் ஐயமே எழுகிறது: 'சூதுவாது தெரியாத அந்தச் சமுதாயத்தின் வயிற்றிலேஉருவான இத்தலைவர்கள் எப்படிப் பிறக்க முடிந்தது?' என்பது பெரும் புதிராகவே இருக்கிறது'... என்று தில்லிப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் டாக்டர் சாலை இளந்திரையன் எம். ஏ. எம். லிட் பி.எச்.டி. அவர்கள் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள விசேட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்: அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

இரண்டே மொழிகள் வழங்குகிற ஒரு நாட்டில், அந்த இரண்டு மொழிகளையும் சமமான உரிமைகளோடு வாழவிட்டு, இணங்கிவாழ இவர்கள் விரும்பவில்லையே! கம்யூனிஸ்ட் சிங்களவர்கள் கூட, 'நாம் மதச்சார்பற்ற அரசாக இயங்குவோம்' என்று சொல்லவில்லையே! சோசலிசமும் உழைப்பாட்டாளியிசமும் பேசுகின்ற சிங்களத் தலைவர்கள்கூட, தமிழ் பேசும் இலங்கைத் தொழிலாளிகளை இயன்ற அளவு வெளியேற்றிவிடவே விரும்புகிறார்களே!... இதை எல்லாம் அறியாமை என்றோ அப்பாவித்தனம் என்றோ நினைக்க முடியவில்லை.

## காதலும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பது புலனுகும்! தவருகப் புரிந்திடாதீர்!!

எனவே பண்டைத்தமிழன் போற்றிய வீரத்தை - உண்மையிரு காதலை—பண்புமிகு கலாச்சாரத்தை, பண்பாட்டைப் பேணிக்காக்க என் இனம் சகோதர, சகோதரிகளே முனைவீரீர்!! முடக்குவாதிகளின் முன் [illegible] மண்டியிடாதீர்! உ[illegible] தலைவனைக் காண்பீர்! [illegible] தம் கட்டளையைச் சிரமேற் கொள்வீர்!

## கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகம்

'பாரதி விழாவினையொட்டி யாழ்நகரில், தமிழ் கலை, கலாச்சாரங்கள் பிரதிபலிக்கும் வகையில், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், எனும் பொருளுக்கமைய, கைத்தொழில் — நுண் கலை பொருட்காட்சி ஒன்றினை நடத்துவதற்கு கல்வி, கலை, கலாச்சாரக் கழகம் தீர்மானித்துள்ளது.'

கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகத்தின் செயற்குழு கூட்டம், அண்மையில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீ[illegible] தலைமையில் கூடிய பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவினில் தமிழ் வளர்த்த ஈழத்துப் பெரியார்களின் திரு உருவம் தாங்கிய அலங்கார வண்டிகளின் பவனியும், கைத்தொழில் நுண் கலை பொருட்காட்சிகளின் சிறப்பு அம்சங்களும், அரங்குகளும் இடம் பெறுவதுடன், மேற்படி பொருட்காட்சி சம்பந்தமாகவும், பாரதி விழா சம்பந்தமாகவும், இடம் பெறவிருக்கும், கவிதை, கட்டுரை, பேச்சு, நாடகம், ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்கு 'தங்கப்பதக்கம்' பரிசு வழங்குவதென்றும், மாணவர்களுக்கான போட்டியில் கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகத்தின் அனுசரணையின் கீழ் கல்வி வசதிக்கான போதிய உதவிகளையும் சலுகைகளையும், அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது:

## 'பங்களா தேஷ்' மண்ணில் பத்தாயிரம் துரோகிகள்!

வங்காள தேசத்தில் பாகிஸ்தான் இராணுவத்தோடு போராட்ட காலத்தில் ஒத்துழைத்த 10,000 உள்நாட்டு வங்காளிகளை 'பங்களா தேஷ்' அரசு கைது செய்திருக்கிறது:

இலங்கைத் தமிழர் இயக்கங்களுக்கு குந்தகம் புரியும் உள்ளூர் துரோகிகளைப்பற்றி நாம் கவலைப்படுவதுண்டல்லவா? துரோகிகள் இல்லாத எந்த இனமும் எந்த நாடும் உலகில் இல்லை என்பதற்கு வங்காள தேசத்தில் 10,000 துரோகிகள் கைதாகி இருப்பது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

முப்பது லட்சம் பேரைக் களப்பலி கொடுத்து— ஒரு கோடி மக்களை அகதிகளாக்கி- உரிமைப்போர் நடத்திய பங்களா தேஷ் மண்ணிலேயே துரோகிகள் இருந்திருக்கிறார்கள்—அதுவும் ஒன்றா? இரண்டா? பத்தாயிரம் துரோகிகள்!

'பங்களா தேஷ்' மண்ணில் பத்தாயிரம் துரோகிகள் இருந்திருக்கிறார்களே- இந்த நாட்டில் நாங்கள் ஓரிரு துரோகிகள் இருப்பதில் என்ன தவறு?' என்று இனி மார்பை நிமிர்த்தி தரையப்பாவும் தியாகராசாவும் நம்மைக் கேட்டாலும் கேட்கலாம்.

## புதிய உப தலைவர்

பருத்தித்துறை நகர சபையின் புதிய உப தலைவராக நெல்லண்டை வட்டார உறுப்பினர் திரு. வ. கமலநாதன் அவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டார். இவரை எதிர் குழுத் தலைவர் பிரேரிக்க, ஆட்சிக் குழுத் தலைவர் அனுவதித்தார். திரு. வ. கமலநாதன் அவர்கள் தும்பளைத் தமிழரசு வாலிப முன்னணியின் தலைவராகவும், பருத்தித்துறைத் தொகுதி தமிழரசு வாலிப முன்னணிகளின் மத்திய கிளையின் செயலாளராகவும் பதவி வகிக்கின்றார்.

பருத்தித்துறை நகரின் அரசியல் சரித்திரத்தில் வயதில் குறைந்த (22வயது) இளைய அங்கத்தவரொருவர் உப தலைவராகத் தேர்ந்தெடுக்

(9ம் பக்கம் பார்க்க)

எதிர்வரும் ஆவணிமாதம் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கான சகல ஏற்பாடுகளையும், கழகம் வெகு துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி மந்திரி மஜீத்! உதடுகளை மூடிக்கொண்டிரு!

## இஸ்லாம் மதத்தைவிட, இந்துமதத்தை விட, எமக்கு தமிழே பெரிது!

(தமிழர்களின் உரிமைக் குரலை எதிர்த்து சமீபத்தில் மூதூர் மஜீத் முழங்கித்தள்ளி இருந்தார். அவருக்கு பதில் கூறும் வகையில் எழுதப்பட்டது இக் கட்டுரை)

நபிகள் பெருமானாரின் திருக்குர் ஆனை நாங்கள் ஏற்றுக்கொண்டு அல்லாவுக்கு விசுவாசமான அடியார்களாய் இருக்கிறோம். அதற்காக எங்கள் தாய் மொழியாம் தமிழையும் தமிழினத்தையும் மறந்து நாங்கள் துரோகம் செய்ய மாட்டோம்!

இஸ்லாம் மதம் முக்கியம் என்பதற்காக உலகின் உள்ள இஸ்லாமிய மக்கள் எல்லோரும் தங்கள் தாய்மொழியை மறந்து பிற இனத்தார் மொழியை ஏற்றுக் கொண்டதில்லை. பாகிஸ்தானில் உள்ள ஒரு இஸ்லாமியரான உருது மக்களின் மொழியை ஏற்றுக் கொள்ளாமல்தானே இன்னொரு இஸ்லாமியரான வங்காளிகள் தங்களுக்கென தனி அரசுரிமை கோரினார்கள்; இங்கே இலங்கையில் தமிழராகிய நம் இஸ்லாமியர்கள் சிங்களத்தை தழுவுவதா? கூடாது! கூடாது!

இந்த அரசாங்கம் எந்த வகையில் ஈழத்து வடக்கு—கிழக்கு மாகாணங்களில் வாழும் இஸ்லாமியர்களுக்கு நன்மை செய்திருக்கிறது என்று விளக்கவில்லை?

55,000 சதுர மைல் நிலப் பரப்பில் 7½ கோடி மக்களைக் கொண்ட வங்காளத்தில் 6½ கோடி இஸ்லாமியரும் எஞ்சிய 1 கோடி மக்களில் 90% இந்துக்களும் ஆக பத்து வீதமே கிருத்தவர்களும் இருக்கிறார்கள். அத்தனை சிறிய தொகையினரான கிருத்தவர்களின் மதமும் வங்காள தேச அரசியல் சட்டத்தில் கௌரவிக்கப்பட்டிருக்கிறது. 6½ கோடி இஸ்லாமியரின் இஸ்லாம் மதம் அங்கு அரசமதம் ஆக்கப்படவில்லை. இது முஜிபுர் ரகுமானின் வங்காளத்தில். ஆனால் 25,000 சதுர மைல் நிலப்பரப்பில் உள்ள ஒரு கோடி மக்களை மட்டும் கொண்ட இலங்கையில் 6 இலட்சம் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள். அவர்களது மதத்துக்கு இங்கே அரசுரிமை இல்லை; பௌத்த மதமே அரச மதமாகிறது புதிய குடியரசில்—புதிய அரசியல் சட்டத்தில் இதுதான் இந்த அரசாங்க

ஜனாப் அப்துல் ஜபார்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் இஸ்லாமியர்களுக்கு செய்யும் நீதி!

இஸ்லாம் மதம் ஒரு மனிதனின் கொள்கை உறுதிக்கு உதைத்திலேயே எடுத்துக் காட்டான ஒரு மதம்; 'மானத்தை விற்று இஸ்லாமிய மக்கள் வயிற்றுக்காக எதையும் செய்வார்கள்'' என்ற கெட்ட பெயரை இஸ்லாமியர்கள் எந்தக் காலத்திலும் எடுத்ததில்லை. இலங்கையில் இஸ்லாமியர்களான நாங்கள் எங்கள் தாய்மொழியாம் தமிழை விற்று — வயிற்றைக் கழுவி — எங்கள் மதத்துக்கே இழுக்குத் தேடலாமா இதுவரை இல்லாத வசையை ஏற்படுத்திக் கொள்ளலாமா?

உரிமைகளை விட்டுக் கொடுக்கச் சொல்லி முகமது நபிகள் ஓரிடத்தில் கூட கூறியது கிடையாது.

மட்டக்களப்பில் மருத நிலத்து வயல்களில் எல்லாம் இயற்கையாகத் தமிழ்க்கவி இயற்றி— இந்துக்களையும் கிருத்தவர்களையும் விட — மிக அதிக தமிழ் வளர்த்தவர்கள் — தமிழோடு ஒன்றிக் கலந்து கிடந்தவர்கள் — இஸ்லாமியர்களாகிய நாங்கள் நாங்களா தமிழை அழிக்கும் புதிய அரசியல் சட்டத்துக்கு ஒத்துப்போவது?

உதவி மந்திரி மஜீத் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கலாம்; அதற்காக அவர் இஸ்லாமிய மக்கள் அனைவர் சார்பாகவும் பேசவோ — கிழக்குமாகாண மக்கள் அனைவருக்காகவும் குரல் கொடுக்கவோ—எந்த உரிமையும் அவருக்கில்லை;

இலங்கையில் வாழும் ஆறு இலட்சம் இஸ்லாமியர்களில் பெரும்பாலான தமிழர்கள் கிழக்கு வடக்கு மாகாணங்களில் தான் வாழ்கிறோம். இந்து — கிருத்தவ தமிழர்களோடு-இரண்டறக் கலந்து வாழ்கிறோம்.

இஸ்லாமியர்களாகிய நாங்கள் தமிழ் உரிமைப் போரில் கலந்துகொள்வதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

---

## தமிழரசு உருத்திரபுரக் கிளை

மேற்படி கிளையின் 7வது ஆண்டு விழா திரு. ச. அந்தோனிப்பிள்ளை இல்லத்தில் 8-2-72மாலை 5மணியாளவில் கட்சிக் கிளை தலைவர் ச. அந்தோனிப்பிள்ளை இல்லத்தில் நடைபெற்றது.

செயலாளர் திரு. க. சகுமார் பேசும்போது கிளிநொச்சி தொகுதியில் சென்ற பொதுத் தேர்தலிலும் பார்க்க இம்முறை கூடுதலான வாக்குகளை பெற்றதேயன்றி நாம் எமது ஸ்தானத்தை இழந்ததாக கருதக் கூடாது; அரசாங்கம் எமக்கு சகல துறைகளிலும் பாரபட்சமாகவே நடக்கிறது. இப்பொழுது அரசாங்கம் கொண்டுவந்துள்ள அரசியல் சட்டத்தில் எமது கட்சி பா. உ. தவிர ஏனைய பா. உ.களையும் கைசாத்திடக்கூடாது எனவேண்டுகோள் எமது கிளையால் விடுக்கிறோம் என கூறினார்;

திரு. மு. ஆலாலசுந்தரம் திரு. வின்சென்ட், கவிஞர் கரவைகிளான், கவிஞர் முத்துசிலன் திரு. ச. யோன் ராசா, கிராமசபை உறுப்பினர், திரு. ச. சு. முருகேசு பட்டின சபைத் தலைவர் திரு. சி. இராசேஸ்வரன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

கீழ் காண்போர் நிர்வாக சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர்கள்: திரு. வ. நவரத்தினம் பா. உ. திரு. மு. ஆலாலசுந்தரம், வழக்குரைஞர் திரு. செல்லத்தம்பு பா. உ. தலைவர் திரு. ச. அந்தோனிப்பிள்ளை உப தலைவர் திரு. சி. கந்தையா செயலாளர் க. சரவணமுத்துகுமார் உபசெயலாளர் திரு. பெனடிட் பொருளாளர் திரு. ச. யோன்ராசா 6 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்; நாட்டின் முன்னேற்றத்தை கருதி வீதிகளை (மாதாபுரம்) மாதம் இருமுறை சிரமதான மூலம் திருத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டு முழுப் பொறுப்பாளர்களாக திரு. க. இராசரத்தினம் (ஆசிரியர்) திரு. க. ச. குமார் (செயலாளர்) திரு. ந. பெனடிட் (உப செயலாளர்) திரு. யோன் ராசா (கிராமசபை உறுப்பினர்) திரு. ச. இராசேஸ்வரன் திரு. இ. இராசரத்தினம் திரு. பொ. பாலசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். சென்றஞாயிறுமுதல் சிரமதானமும் நடைபெற்றது.

—

## தமிழரசுக்கட்சிக் கிளை திறப்பு

சென்ற 5.5.72 திகதி புளியங்குளம் என்னும் கிராமத்தில் தமிழரசுக் கட்சிக் கிளைக் காரியாலயம் வவுனியாத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் உயர் திரு. செ. மா. செல்வநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பிரதம விருந்தினராக கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் கலந்துகொண்டார்கள்;

செயற்குழு அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. மு. இருத்தொண்டர் (கி. ச. உப தலைவர்) காரியதரிசி; திரு. வி. க. விருசித்தம்பி இ. வி. ச. தலைவர் உப தலைவர் வ. பரராசசிங்கம் (விவாக இறப்பு பிறப்பு பதிவாளர்) உப காரியதரிசி இ. சிவநாதன் திருவாசசபை அங்கத்தவர்களாக திரு. வே. கார்த்திகேசு (முன்னாள் கிராம சேவகர்) த. சதாசிவம். ஓ. முத்தையா தேவர் (பிரபலவர்த்தகர்) நா. கோபாலகிருஷ்ணன் மா. வெற்றிவேலு (கிராம சபை தலைவர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## தமிழ்த்தாய் மன்றத்தின் அண்ணா விழா!

அறிஞருக்கு பொன்னாடை கலைஞருக்கு பொற்பதக்கம்

அனைத்திலங்கைத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமான தமிழ்த் தாய் மன்றத்தின் அண்ணா விழா எதிர்வரும் பங்குனி மாதம் யாழ்ப்பாணத்தில் சிறப்புறக் கொண்டாடப்பட இருக்கிறது. இவ் விழாவில் ஈழத்தின் தமிழ் அறிஞர்களில் ஒருவரான சுழவேந்தன் அவர்களுக்கு 'தமிழேந்தல்' எனும் பட்டம் வழங்கப்பட இருக்கிறது. ஈழவேந்தன் அவர்களுக்கு திரு. அமிர்தலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்.

ஆண்டுதோறும் தமிழ்த் தாய் மன்றம் வழங்கி வரும் 'அண்ணா பதக்கம்' இம்முறை மட்டக்களப்பைச் சேர்ந்த கலைஞர் ஜீவம் யோசேப் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வயலின் இசையை [illegible] மூலம் பயின்றவர் இவர் ஒரு [illegible]. ஜீவம் யோசேப் அவர்கள் இயற்கைக் கலைஞர். அண்ணாது இசை [illegible] தமிழ்த்தாய்மன்றம் பாராட்டிச் சிறப்பிக்கிறது.

---

# மக்கள் குரல்

## வவுனிக்குள மடல்

வவுனிக்குளம் 2ம் யூனிட், இரண்டாம் பகுவதில் சிற்சில சந்தர்ப்பவாதிகளின் முயற்சியால் ஸ்ரீலங்காக்கிளை ஒன்று ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்து வருவதாகவும், சிலரிடம் ஏமாற்றிப் பணம் வேண்டி சுமார் ஐம்பது ரூபாவரை சேர்த்திருப்பதாகவும், வேறு சிலரைப் பயமுறுத்தி அங்கத்தவராகச் சேர்க்க முயற்சித்ததாகவும், அறியப்படுகிறது. அதை அறிந்த ஊர்மக்கள் கடுமையான எதிர்ப்புக் காட்டத்தொடங்கி விட்டார்கள்; இற்றைவரை தமிழரசுக் கோட்டையாகவும், வேறு எந்தக் கட்சிக்காரரும் இவ்விடம் அணுக முடியாமலும், இருந்து வரும் எங்கள் கிராமத்தில், ஓர் அந்நிய ஆதிக்கத்தின் ஆட்சிக் கிளையா, என்று கேள்விக் கணை தொடுத்த வண்ணம் இருக்கிறார்கள்.

இப்படியிருந்தும் சுயநலவாதிகள் முயற்சியைக் கைவிடுவதாக இல்லை. இதில் அரசாங்க உத்தியோகத்தர் சிலரும், படித்து வீட்டு வேலைக்காக அலைந்து திரியும் வாலிபர்களும், யார்காலைப் பிடித்தாவது ஓர் அரசாங்க வேலையில் அமர்ந்திடவேண்டுமென்ற நப்பாசையினால் இந்த எச்சில் இலை நக்கும் வேலையைத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்கு [illegible] நீங்கள் [illegible] [illegible] [illegible] வீஸ்ட் [illegible] தமைக்கலாம், உங்கள் தேவை பூர்த்தியானவுடன் கிளை கைக்கலைக்கலாம் (திருவிழாவுக்குக் கடைபோட்டது போல்) அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. உங்கள் சு. கிளையமைப்பால் தமிழரசுக்கட்சியின் செல்வாக்குக் குறைந்து விடலாம் என்று மாத்திரம் கனவு காணுதீர்கள். எத்தனை எத்தனை கிளைகளை அமைக்கிறீர்களோ, அத்தனைக்கத்தனை எங்கள் கட்சிக்கு மதிப்புக்கூடுமேயொழிய மதிப்புக் குறைவதில்லை.

நீங்கள் உண்மையான தமிழ் மகனாய் இருந்தால், இந்த நாட்டின் அசல் தமிழ் வித்தாக இருந்தால், உங்கள் நரம்பிலோடுவது தமிழ் இரத்தமாயிருந்தால், பதவி மோகத்துக்கு அடிமையாகி, அந்நிய ஆதிக்கத்தின் ஆசை வார்த்தையில் மயங்கிவிடாமல் சு. கிளையமைக்கும் எண்ணத்தை உடனடியாகக் கைவிட்டு, நீங்கள் ஏமாற்றிப் பணம் வேண்டியவர்களிடம் பணத்தைக் கொடுத்து விடுவது நல்லது, அல்லது உங்களுக்குப் பட்டம் பதவிதான் பெரிதென்றெண்ணினால், பதவி மோகத்துக்கடிமையாயிருந்தால், தன்மானமிழந்த தலையனாய் தறுதலையாயிருந்தால், அந்நியரின் கால்பிடித்துத்தான் வாழ வேண்டுமென்று உங்கள் தலையில் எழுதியிருந்தால், அம்மாவின் ஆட்சிக்கு ஆலவட்டம் பிடித்து அவர்களின் எச்சில் இலைகளைப் பொறுக்கி அவர்களுக்கு நல்லவர்போல் நடித்து, உங்கள் அற்ப பதவியை பெற்று நெடுங்காலம் வாழ்ந்து கொள்ளுங்கள். ஆனால் ஒன்று தன்னுயிர்போல் தன்மானம் காத்து வரும் தமிழரசுக் கட்சியினராகிய வவுனிக்குள் 2ம் யூனிட் மக்களின் அமைதியைக் குலைத்து அவர்களின் ஆவேசத்துக்கு (கோபத்துக்கு) ஆளாக வேண்டாம்;

—குளக்கோட்டன்

---

## அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கூட்டங்கள் நடாத்தும்!

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வடக்கிலும் கிழக்கிலும் பல மேடைகளை அமைத்து புதிய அரசியல் சட்டம் பற்றிய கருத்தரங்குகளை நடத்த உள்ளது; இக் கருத்தரங்குகளில் பல கட்சிக்காரர்களும் பங்கு பெறுவார்கள்.

''புதிய அரசியல் சட்டம் பற்றி தமிழ் மக்கள் தெளிவான விளக்கம் பெறும் பொருட்டு இந்த ஒழுங்கினைச் செய்கிறோம்'' என்று அ. எ. ச. செயலாளர் கூறினார்;

---

## புதிய உப...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட பெருமையை திரு. வ. கமலநாதன் அவர்கள் பெற்றுள்ளார். இவர் நெல்லண்டை வட்டார வாலியர் இயக்கத்தின் தலைவராகவும், தும்பளை கிழக்கு சன சமூக நிலையத்தின் ஆலோசகராகவும், நெல்லண்டை இளைஞர் நன்னெறிக் கழகத்தின் போஷகராகவும் பணியாற்றி வருகின்றார்; இவரது தெரிவைப் பாராட்டி தும்பளைப் பகுதியில் நடைபெற்ற பாராட்டுக்கூட்டத்தில் திரு. கி. மு. கந்தசாமி, திரு. மு. பொ. வீரவாகு, திரு. நடராசா உட்படப் பலர் இவரது பாகு பாடற்ற சேவையைப் புகழ்ந்து பேசினார்கள்; இவரது ஆட்சியில் நகர சபையின் சகல அலுவல்களும் தனித்தமிழில் நடைபெறுமென வாலிபர்கள் எதிர்பார்த்ததற்கு இணங்க இப்போதே சபை அலுவலகத்திலிருந்த ஆங்கிலப் பெயர்ப் பலகைகள் மறைந்து தொடங்கித் தமிழ்ப் பெயர்ப் பலகைகள் காட்சியளிக்க ஆரம்பித்துள்ளன;

---

குற்றவாளி யார்?

''தனது கடமைகளை சரிவர செய்யாதவர்கள் எல்லோ[illegible]ம் குற்றவாளிகளே!'' -ஞானி

நல்லதையே வாங்குங்கள், நன்மையே அடையுங்கள் மில்க்வைற் தயாரிப்புகள் வாங்கி அதிக லாபமடையுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல் — பிளாசா — கிங்ஸ்லி — வெலிங்டன் — லிடோ
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொழும்பு) (யாழ்நகர்) (யாழ்நகர்)

**எம். ஜி. ஆர். - பத்மினி**

**அசோகன் சுந்தரராஜன் மஞ்சுளா**


**சோ தேங்காய்சீனிவாசன்**

— நடித்த —

சத்தியா மூவிஸ்

# ரிக்ஷாக்காரன்

(ஈஸ்மன் கலர்)



இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

---

## சிலோன் என்டடெயின்ஸ்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது



## 3வது வெற்றி மாதம்

# சென்ட்ரல் ராணி

(மருதானை) (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

(ஈஸ்மன் கலர்)

# சவாலே சமாளி

---

## சிலோன் தியேட்டர்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது

# செல்லமகால் - ஈரோஸ்

கிங்ஸ் — நெல்சன் — இம்பீரியல் — வின்சர்
(பதுளை) (திருமலை) (மட்டு நகர்) (யாழ் நகர்)

லீலா, ஆனந்தன், ஜெயகாந்த், பேரம்பலம், சாந்தி, இந்திராதேவி, —நடித்த—

வி. எஸ். 4. பிலிம்ஸ் அளிக்கும்

# குத்து விளக்கு

இசை
ஆர். முத்துசாமி

மூலக் கதை — தயாரிப்பு
வி. எஸ். துரைராஜா

ஒளிப்பதிவு — டைரக்ஷன்
டபிள்யூ. எஸ். மகேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலேசன் ... லிமிட்டெட் ... கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ...